வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 06 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் :26 பக்கங்கள் : 16

# இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் கூட்டாகச் செயல்பட வாருங்கள்!

## தமிழரசுக் கட்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜனவரி 26

**புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பான கலந்துரையாடலுக்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உத்தியோக பூர்வ அழைப்பு விடுத்துள்ளது.**

அந்தவகையில் எழுத்து மூலமான அழைப்புக் கடிதத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திடம் நேற்று வழங்கினார்.



அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழருடைய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பாக, அரசாங்கத்திடம் வினவுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த பிரதிநிதிகளாலும், ஜனாதிபதியாலும் தமிழருடைய இனப்பிரச்னை விடயமானது, 15

## அதானி காற்றாலைத் திட்டம் இரத்து செய்யப்படமாட்டாது

### அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, ஜன. 26

இந்திய அதானி குழுமத்தின் காற்றாலை மின்திட்டத்தை இரத்துச் செய்வ தற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்திய நிறுவனத்தினால் வழங்கப்படும் கட் டண விகிதங்கள் மிக அதிகம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் 15

## ரணில் - சஜித் கூட்டணி சேர்வது நிச்சயமற்றது?

கொழும்பு, ஜன. 26

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டும் கூட்டணியமைக்க அவ்விரு கட்சிகளின் பிரபல ஐந்து உறுப்பினர்கள் மாத்திரம் எதிர்ப்பு தெரிவித்து வருவதாக அறியக்கிடைத்துள்ளது.

அதன் காரணமாக, இரு கட்சிகளும் கூட்டணியமைக்கும் செயல்பாடுகளை மேற்கொள்வது 15

## யோஷித ராஜபக்ஷ நேற்று கைது!

கொழும்பு, ஜன. 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ நேற்று அதிகாலை பெலியத்தை பகுதியில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார். 15



## மோசடியாளர்களைக் கைது செய்யும்போது அரசியல் பழிவாங்கல் எனக்கூறுவது தவறு!

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, ஜன. 26

அரச நிதியை மோசடி செய்த ஊழல்வாதிகளை சட்டத்தின் பிரகாரம் கைது செய்யும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமாயின் நிதி மோசடியாளர்கள் சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்த வேண்டும். எவரையும் பழிவாங்கவும், பாதுகாக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாதென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

சமகால 15

## விபத்தில் படுகாயமடைந்த லொறி உதவியாளர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

லொறி விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த லொறியின் உதவியாளர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மாத்தளை பகுதியைச் சேர்ந்த வெலகெதர நிஸான் சானக (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் லொறி ஒன்றில் உதவியாளராக பணி புரிகின் றார். கடந்த 14ஆம் திகதி மாத்தளையில் இருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த 15

## உண்ணாவிரதப் போராட்டத்தில் யாழ்.பல்கலை மாணவர் வெற்றி!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு நாட்களாக முன்னெடுத்து வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

மாணவர்கள் மீதான பழிவாங்குதல்களை உடன் நிறுத்த வலியுறுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு நாட்களாக மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் விளைவாகவும் மாணவர் களின் மீதுள்ள நியாயங்களின் விளைவாகவும் பொய்யாக புனையப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து 15

## கனடாவிலிருந்து யாழ். வந்த ஆராய்ச்சியாளர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணத்தில், விவசாய ஆராய்ச்சி குறித்து உரையாடிக்கொண்டிருந்த ஆராய்ச்சியாளர் நேற்று மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். கோப்பாய் - கட்டைப்பிராய் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை ரவிச்சந்திர நேசன் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 13 ஆம் திகதி கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர் கனடா பல்கலைக்கழகத்தில் ஒரு விவசாய ஆராய்ச்சியாளராக உள்ளார். நேற்று நள்ளிரவு பல்கலைக்கழக 15

## பயங்கரவாத சட்டத்தை இரத்துச் செய்யவில்லை!

### அரசாங்கத்தைச் சாடுகின்றார் சட்டத்தரணி நுவான் போபகே

கொழும்பு, ஜன. 26

தேர்தலுக்கு முன்பு வாக்குறுதி வழங்கியபடி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், அது தொடர்பாக பல்வேறு முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் 15

## ஊழல்கள் தொடர்பாக 11 வழக்குகள் உடனடி விசாரணைக்கு 4 வழக்குகள்!

கொழும்பு, ஜன. 26

முன்னயை ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடி தொடர்பாக 11 வழக்குகளில் 4 வழக்குகள் உடனடி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் கொழும்பு ஊடகம் ஒன்று பரபரப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் மோசடி, ஊழல், கொலை மற்றும் சட்டவிரோத சொத்துக் குவிப்பு உள்ளிட்ட பாரதூரமான குற்றங்கள் தொடர்பான 11 வழக்குகள் தொடர்பாகவும் அதற்கு தேவையான கோப்புக்களை சட்டமா அதிபருக்கு காவல்துறை அனுப்பி வைத்துள்ளது.

இந்த வழக்குகளில் பல மூத்த அரசியல்வாதிகள் மற்றும் முன்னைய ஆட்சிக் காலத்தின் மூத்த அதிகாரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த 15

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 101 கிலோ கேரளக் கஞ்சாவுடன் யாழ். பலாலியில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்ப்பாணம், பலாலி - அன்ரனிபுரம் கடற்கரை பகுதியில் 101 கிலோ 833 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலேயே 67 வயதுடைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைக ளுக்காக பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (எ)

# சுன்னாகத்தில் இன்று சிறப்புப் பட்டிமன்றம்

யாழ்ப்பாணம், ஜன.26

சுன்னாகம் தாளையடி அரி கரபுத்திர ஐயனார் தேவஸ்தான மகா கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பதினமாகிய இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 08. 30 மணிக்கு சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறும்.

இன்று தமிழர்களின் கலை இலக்கிய பண்பாடு வளர்கி றது... தளர்கிறது.. என்ற தலைப்பில் நடைபெறும் இந்தப் பட்டிமன்ற நிகழ்வில் சைவப்புலவர் செ. த. குமரன் நடுவராக கலந்து கொள்ள வுள்ளார்.

வளர்கிறது அணி சார்பில் துஸ்யந்தன், யதோட்சயன் ஆகியோரும் தளர்கிறது அணி சார்பில் டிதுசன், அருள்குமரன் ஆகியோரும் வாதிடவுள்ளனர். (எ)

# சங்கரத்தை நாபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று பாற்குட பவனி

யாழ்ப்பாணம், ஜன.26

சங்கரத்தை குளத்தடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெரு விழா கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரை 11 தினங்கள் நடைபெற்று வருகின் றன.

இந்த உற்சவ காலத்தில் 11 தினங்களும் ஆன்மீக பேருரை களையும், வர்ணனைகளையும் செந்நாப்புலவர் மதுரகவி காரை எம். பி அருளானந்தன் வழங்கி வருகின்றார்.

தெய்வீகப் பேருரைகளின் நிறைவில் இடம்பெறும் சைவ சமய போட்டிகளுக்கான பரிச ளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் 'பாற்குடபவனி' சங்கரத்தை சிறீ பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்திலிருந்து நாகபூசணி அம்பாள் ஆலயம் வரை நடை பெறவுள்ளது. (எ)

மன்னார் நீதிமன்றம் முன் துப்பாக்கிச் சூடு

# கைதுசெய்யப்பட்ட ஐவரும் 29ஆம் திகதிவரை மறியலில்

மன்னார்,ஜன.26

மன்னார் நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட் டுச் சம்பவத்துடன் தொடர்பு டையதாக கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர் வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் வழக்கு விசார ணைக்காக வருகை தந்த இரு வர் உயிரிழந்ததுடன்,பெண் ஒருவர் உள்ளடங்களாக மேலும் இருவர் படுகாயம டைந்தனர்.

குறித்த விசாரணைகளை முன் னெடுத்து வந்த பொலிஸார் தொடர்ச்சியாக சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்டவர் களை கைது செய்த நிலையில் கடந்த வியாழக்கிழமை மேலு மொரு சந்தேக நபர் கைது செய் யப்பட்டார்.

மன்னாரைச் சேர்ந்த கடற் றொழிலாளர் ஒருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர். குறித்த கொலைச் சம் வத்துக்கு உதவி ஒத்தாசை வழங் கிய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த சம் பவத்தின் பிரதான சந்தேக நபர் கள் அனைவரும் இராணுவத்து டன் தொடர்பு பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று சர்வதேச சட்ட மாநாடு ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சட்டத்துறை, இந்தியா வின் புகழ் பூத்த சுரானா பல்க லைக்கழகம் மற்றும் சுரானா சர்வதேச சட்டத்தரணிகள் நிறு வனத்துடன் இணைந்து இரண் டாவது தடவையாகவும் "முறை செய்" என்ற தலைப்பில் யாழ்ப் பாணம் சர்வதேச சட்ட மாநாட்டை நடத்துகிறது. நேற் றையதினம் யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங் கில் ஆரம்ப மாகிய இந்த மாநாடானது இன்றும் நடை பெறுகிறது.

மாற்றத்துக்கான கருவியாக சட்டம் என்னும் சாரப்பட

செயல்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப் பொருளில் ஒழுங்கு செய்யப் பட்ட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதி மன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தி னராகவும், தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையா ளர்களில் ஒருவரான ஹிஷாலீ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தின ராகவும் கலந்து கொண்ட னர்.

இதில், ஆளுகை நிலை மாற்றம் தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டியான் ஷாவும், இலத்திரனியல் நிலைமாற்றம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத் தரணி கலாநிதி சுனில் அபேரட் னவும் சிறப்பு ரைகளை ஆற்றி னர்.

அத்துடன் மற்றுமொரு சிறப்பம்சமாக மக்களின் அரசி யலமைப்பு, அதன் எதிர் காலம் என்னும் தலைப்பிலான சிறப்புக் கலந் துரையாடலும் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீட முன்னாள் பேராச ரியர் வி. த. தமிழ் மாறன், ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்த டி அல்மெய்டா குணர ட்ண, பேராதனைப் பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கலன சேனா ரட்ண ஆகியோர் உரையாளர்க ளாக வும் மாற்றுக் கொள்கை நிலை யத்தின் சிரேஷ்ட ஆய்வா ளர் பவானி பொன் சேகா உரை யாளர் மற்றும் நெறியாளரா கவும் பங்கேற்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை தலைவர் கோசலை மதன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த மாநாட் டில் நீதிபதிகள், யாழ். பல்க லைக்கழக கலைப்பீட பீடாதி பதி பேராசிரியர் சி. ரகுராம், சட்டத்தரணிகள், விரிவுரையா ளர்கள், மாணவர்கள் எனப் பல ரும் கலந்துகொண்டனர். (எ-05)

# டெங்கு விழிப்புணர்வு ஆவணப்படம் யாழ். இந்துக் கல்லூரியில் வெளியீடு









யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதி காரி பிரிவின் அனுசரணையில் யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி ஒளிப்படக் கலைக் கழகத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிப்படமாக்கலில் உருவான டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஆவணக் குறும் படம் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப் பட்டது.


யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக கடற்றொ ழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங் கோவன், வடமாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் சமன் தர்மஸ்ரீ பத்திரன, யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ரம்யா சந்திரசேகரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிர தீபன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், யாழ். மாநகர ஆணை யாளர் செ.பிரணவநாதன், பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் படத் தயாரிப்பு மற்றும் படப்பிடிப்பில் ஈடுபட்ட இந் துக் கல்லூரி ஒளிப்பட கழக மாண வர்களுக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இந்துக் கல்லூரி ஒளிப்படக் கழகத் துக்கான கேடயமும் பிரதம விருந்தின ரால் வழங்கி வைக்கப்பட்டது. இந்த ஆவணப்படத்தில் பங்குபற்றிய சுகா தாரத்துறை பணியாளர்கள் ஏனைய விருந்தினர்களால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த டெங்கு ஆவண குறும்படத்துக் காக முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் த.தவ ரூபன் வழங்கியிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் வட்டு. இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தக அரங்க விழாவின் முதல் நாள் மாலை நிகழ்வின் காட்சிகள்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை இனி இரவிலும் சுற்றிவளைப்புகள்

கொழும்பு,ஜன.26

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வது தொடர்பில் கடந்த சில நாட்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுள்ளனர். அத்தோடு, இனி இரவிலும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக, நேற்று இரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்தில் அதிகாரிகள் சுற்றிவளைப் பொன்றை மேற்கொண்ட நிலையில், அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த பல வர்த்தகர்கள் சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ளனர்.

அதேபோன்று, வார இறுதி நாட்களிலும் எதிர்காலத்தில் இரவு நேரங்களிலும் சுற்றிவளைப்புகளை நடத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், முகவர்களை அனுப்பி அரிசி மொத்த விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும், நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்பொருள் அங்காடிகள் உட்பட சில்லறை மற்றும் மொத்த வர்த்தக நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தவும் நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

விற்பனை நிலையங்களில் சுற்றிவளைப்பு மற்றும் விசாரணைகளுக்காக சிறப்புக் குழுக்களை ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# 'பயணிக்கின்றன பாதைகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி,ஜன.26

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எஸ். லதிஸ்கா (ஆரணி) எழுதிய 'பயணிக்கின்றன பாதைகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 09. 30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கவிஞரும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளருமான இ. த ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு சுவாமி தோட்டம் இயக்குநர், அருட்தந்தை செ. யூட் அமிலதாஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக மூத்த கலைஞர் கலாபூசணம் செல்லையா சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. திருமாறன், துளிர் சேவை அமைப்பின் தலைவர் எம். பி. தீபன், தேசிய சிறுவர் சம்மேளன தலைவர் மரியசீலன் எலக்ஸ் ரின்ராஜ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# வவுனியாவில் பாரம்பரிய பொருட்கள் கண்காட்சியும் பொங்கல் திருவிழாவும்




வவுனியா,ஜன.26

பாரம்பரிய பொருட்கள் கண்காட்சியும், பொங்கல் திருவிழாவும் வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றன.

கல்லூரியின் அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸின் வழிகாட்டலில் விபுலானந்தா கல்லூரியின் ஆரம்பப் பிரிவு அதிபர் சி. தர்சனின் தலைமையில் கல்லூரி வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, 1 - 5 வரையான ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பாரம்பரிய முறைப்படி 21 பானைகளில் பெற்றோர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொண்டனர்.

தமிழர் பாரம்பரிய பாக்கு வெட்டி, மண்குடம், சத்தகம், அரிக்கன், குதிரை வண்டி, விளக்கு, நித்துப் பெட்டி, பனங்கட்டி உள்ளிட்ட பல்வேறு பொருட்களையும் காட்சிப் படுத்தினர்.

இந்த நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# திசைகாட்டி எல்லாவற்றையும் மாயையால் மறைத்து வருகிறது

## திலித் ஜெயவீர எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

ஜே. வி. பி. தற்போது அதன் சொந்த மக்களிடமிருந்தே ஒரு சவாலை எதிர்கொள்கிறது என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜெயவீர தெரிவித்தார்.

திசைகாட்டி (தேசிய மக்கள் சக்தி) தரப்பினர் தற்போது, எல்லாவற்றையும் மாயைகளால் மறைப்பதாகவும் திலித் ஜெயவீர கூறினார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஒருவருக்கு மட்டுமே வாகனம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி கூறுகிறார். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் சாமர, எல்லாம் மாதிவெலவில்தான் உள்ளது என்கிறார். அவர்கள் வாகனங்களில் பாராளுமன்றத்துக்கு வருவதை நானும் பார்க்கிறேன். பெட்டிக் கடையில் 2, 000 ரூபாய்க்கு ஒரு பைக்கெற் அரிசி வாங்கினாலும் மூன்று வேளை உண்ண முடியாது.நாம் ஒரு துல்லியமான கணக்கீட்டைச் செய்ய வேண்டும். மக்களை தவறாக வழிநடத்தக்கூடாது"- என்றும் அவர் கூறினார்.(எ)

# உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலத்துக்கு எதிரான மனுமீது விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன.26

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானவை என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நடைபெற்றது.

மனுதாரரின் சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்கள் நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில், மேலதிக விசாரணை நாளை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.அன்று மனுக்கள் தொடர்பான வாதங்களை சட்டமா அதிபரும் முன்வைக்கவுள்ளார்.

இந்த மனுக்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஷாம் காரியப்பர் உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்தனர்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்றும், அவை நிறைவேற்றப்பட வேண்டுமானால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கக் கோரி இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# மக்களின் எதிர்பார்ப்புகளை தயங்காது நிறைவேற்றுவோம்

## அரச கணக்குகள் பற்றிய குழு தலைவர்

கொழும்பு, ஜன.26

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தனது எதிர்காலப் பணிகளை பாரபட்சமின்றியும் சுதந்திரமாகவும் மேற்கொள்ள எதிர்பார்க்கிறது. சரியான முடிவுகளை அச்சமின்றி எடுத்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தயங்காது என்றும் அந்தக் குழுவின் புதிய தலைவர் அரவிந்த செனரத் தெரிவித்தார்.

குறித்த குழுவின் தலைவராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டார். பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு முதல் தடவையாகக் கூடியபோதே அவர் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார்.

தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் பெயரைத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் குமார நவரத்ன வழிமொழிந்தார்.

இங்கு உரையாற்றிய குழுவின் தலைவர் தெரிவிக்கையில், நாட்டை பாரிய நிதி நெருக்கடியிலிருந்து மீட்டு சரியான திசையை நோக்கி கொண்டு செல்லும் சவாலை சமாளிக்க அனைவரின் அர்ப்பணிப்பையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி குற்றச்சாட்டில் 132 பேர் கைதாகினர்!

## 2024 இல் 900 வழக்குகள் தாக்கல்

கொழும்பு, ஜன.26

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக சட்டவிரோத நிறுவனங்களுக்கு பணம் செலுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் இது தொடர்பில் 132 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் மோசடி செய்பவர்களுக்கு பணம் கொடுக்கும் சம்பவங்களில் 27 வீதம் அதிகரிப்பு காணப்படுவதாக குறித்த பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில், வெளிநாடுகளுக்கு செல்வதற்காக சட்டவிரோத நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவது தொடர்பாக 3675 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில், இது 2024 ஆம் ஆண்டில் 4658 முறைப்பாடுகளாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, 2024 ஆம் ஆண்டில் குறித்த மோசடிகள் தொடர்பில் 132 பேர் கைது செய்யப்பட்டதாகவும்

மேலும், உரிமம் பெற்ற 14 நிறுவனங்களின் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில், 15 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு 132 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், உரிமம் பெற்ற 14 நிறுவனங்களின் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதற்காக, 2024 ஆம் ஆண்டில் 900 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 182 வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டன - என்றார். (எ)

# ரூ.20,000 இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது

கொழும்பு, ஜன.26

20, 000 ரூபாய் இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை இலஞ்ச ஊழல் ஆணைக் குழு கைது செய்துள்ளது.

கிரிபாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் பேரில் அந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

திருமணம் செய்து தற்போது கைவிட்டுச் சென்ற மனைவிக்கு எதிராக தாக்கல் செய்த இழப்பீட்டு வழக்கு தொடர்பாக, மனைவிக்கு எதிரான பிடியாணையை நிறைவேற்றவும், அவரது மனைவியை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும், குறித்த பொலிஸ் சார்ஜன்ட் முறைப்பாட்டாளரிடம் 20, 000 ரூபாய் இலஞ்சம் கோரியுள்ளார்.

குறித்த இலஞ்சத் தொகையை வழங்காவிட்டால் முறைப்பாட்டாளருக்கு எதிராக ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கையை தொடர்பு படுத்தி வழக்குத் தாக்கல் செய்து சிறையில் அடைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவ்வாறு செய்யாமல் இருக்க குறித்த இலஞ்சத் தொகையை வழங்குமாறு குறித்த பொலிஸ் சார்ஜன்ட் முறைப்பாட்டாளருக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த பொலிஸ் அதிகாரி சம்பந்தப்பட்ட இலஞ்சத் தொகையை வாங்கச் சென்ற போது, முறைப்பாட்டாளரின் வீட்டில் வைத்து, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு களை விசாரிக்கும் ஆணைக் குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். (எ)

# மசாஜ் நிலைய உரிமையாளருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை!

கொழும்பு, ஜன.26

இந்தோனேசியாவிலிருந்து மூன்று இளம் பெண்களை சிகிச்சை நிபுணர்கள் தொழிலுக்காக அழைத்து வந்து விபசாரத்தில் ஈடுபடுத்தியதற்காக மசாஜ் நிலைய உரிமையாளருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ள நிலையில் இந்த தண்டனையை 5 ஆண்டுகளில் அனுபவிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா படபெந்திகே இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

மேலும், பாதிக்கப்பட்ட மூன்று இளம் பெண்களுக்கும் தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இழப்பீடு வழங்கப்படாவிட்டால், மேலதிகமாக ஒரு வருடம் தளர்த்தப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது. (எ)

# மக்கள் தொகை அதிகரிப்புடன் தேங்காய் உற்பத்தி குறைந்தது

## விலை அதிகரிப்புக்கு இதுவே காரணம்

கொழும்பு, ஜன.26

நாட்டில் தேங்காய் விலை அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம், மக்கள் தொகை அதிகரிப்புடன் ஒப்பிடும்போது கடந்த 20 ஆண்டுகளில் தேங்காய் உற்பத்தி குறைந்து வருவதேயாகும் என ருஹூணு பல்கலைக்கழகத்தின் பயிர் அறிவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் அருண குமார தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டளவில், தேங்காய் உற்பத்தி 3, 000 மில்லியனாக இருந்ததாகவும், அப்போது நாட்டின் மக்கள் தொகை 18 மில்லியனாக இருந்ததாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகை 23 மில்லியனாக அதிகரித்திருந்தாலும், தேங்காய் உற்பத்தி அதிகரிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு தேங்காய் உற்பத்தி இல்லாததே தேங்காய் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாகவுள்ளது - என்றார்.

தேங்காய் பற்றாக்குறைக்கு நீண்டகால தீர்வாக இந்த ஆண்டு 3 மில்லியன் தென்னை மரக்கன்றுகளை நடுவதற்கு தென்னை பயிர்ச்செய்கை சபை தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் தேங்காய்களின் விலையுடன் ஒப்பிடுகையில், 2020ஆம் ஆண்டில் ஒரு தேங்காய் சந்தையில் 60 முதல் 70 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு தேங்காயின் விலை சுமார் 100 ரூபாவாக இருந்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு தேங்காயின் சராசரி சில்லறை விலை 80 - 120 ரூபாவாக இருந்தது.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு தேங்காயின் சில்லறை விலை 160 இலிருந்து 200 ரூபாவாக உயர்ந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(எ)

# திடீரென உயிரிழக்கும் பறவைகள்!

கொழும்பு, ஜன.26

கொழும்பு, பேர வாவியில் திடீரென பறவைகள் உயிரிழக்கின்றமை தொடர்பில் நீர் மாதிரிகள் குறித்த ஆராய்ச்சி அறிக்கையை மூன்று நாட்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (நாரா) தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கை மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுச்சூழல் ஆய்வுகள் பிரிவின் தலைவர் கலாநிதி ஷியாமலி வீரசேகர தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபை பயன்படுத்திய இரசாயனம் காரணமாக பறவைகள், விலங்குகள் இறந்ததாக வெளியான செய்திகளை உறுதிப்படுத்த முடியாது என கொழும்பு மாநகர சபையின் தலைமை கால்நடை மருத்துவர் முகமது இஜாஸ் தெரிவித்தார்.

இவ்வாறு, உயிரிழந்த 25 விலங்குகளில் 7 விலங்குகளின் உடல்கள் ஹோமாகம கால்நடை பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜன.26

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (எ)

# தப்பிச் சென்ற கைதி மதுபோதையில் கைது

கொழும்பு, ஜன.26

சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், சிறுமி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாக குறித்த நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

தம்புத்தேகம பொலிஸ் பிரிவில், அநுராதபுரம் - பாதெனிய பிரதான வீதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் திருடப்பட்டது என்பது தெரியவந்தது.

# பெருமளவு போதைப்பொருள், ஆயுதங்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.26

குற்றம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவினரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பெருமளவு போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவின் விமலசிறி டி மெல் மாவத்தை பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவின் அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில் சுற்றிவளைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், போதைப் பொருள் உள்ளிட்ட பெருமளவிலான சொத்துக்களுடன் சந்தேக நபர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை, சேனநாயக்க மாவத்தையைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் வருமாறு, 03 கிலோ 349 கிராம் ஹேரஷ் போதைப் பொருள், 25 கிராம் குஷ் போதைப்பொருள், 30 கிராம் மெண்டி போதைப்பொருள்,320 போதை மாத்திரைகள், 129 போதை மாத்திரைகள்,

01 வாயு கைத்துப்பாக்கி, 02 வாள்கள்,01 பொலித்தீன் சீலர், 05 மின்னணு தராசுகள், போதைப்பொருளை பொதியிட பயன்படுத்தும் 4,000 பைக்கெற்றுகள், 1, 250 ரூபாய் பணம், 3 தொலைபேசிகள், ஒரு மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில், சந்தேக நபர் போதைப்பொருள் வியாபாரி என்பதும், தடுப்புக் காவலில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் வழிகாட்டுதலின் கீழ் போதைப் பொருளை விநியோகித்து வருவதும் தெரியவந்துள்ளது.

கல்கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.01.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், தை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய மீனவர் பிரச்னைக்கான தீர்வு

வடக்கு கடல் பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக கூறப்படும் விவகாரம் ஒரு புதிய விடயமல்ல - அதே வேளை, இது தீர்வை எட்டிவிடக் கூடிய விடயமும் அல்ல. இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அனைத்து தமிழ், கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் சந்திப்பதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கின்றார். வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக கூடிப் பேசுவதால் இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்க்க முடியும் - இவ்வாறான சாதாரண விடயங்களால் பிரச்னையை தீர்க்க முடியுமென்றால் விடயம் எப்போதோ முற்றுப் பெற்றிருக்குமல்லவா!

இதுதொடர்பில் ஈழநாடு முன்னரும் பல சந்தர்ப்பங்களின் தலையங்கத்தில் அழுத்தமாக தெரிவித்திருக்கின்றது - அதாவது, இந்த விவகாரம் அடிப்படையில் இந்திய - இலங்கை விவகாரம். தமிழ் நாட்டு மீனவர்கள்தான் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். ஆனாலும், தமிழ் நாட்டை நேரடியாக அணுகுவதன் ஊடாக மட்டும் பிரச்னையை கையாள முடியாது. அடிப்படையில் இந்திய மத்திய அரசும் இலங்கை அரசாங்கமும்தான் இந்த விடயத்தின் பங்காளிகள்.

தமிழ் நாடு, ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமான ஒரு பகுதியாக இருப்பதால், தமிழ் நாட்டை நட்பு அடிப்படையில் அணுகலாம். ஆனால், அதற்கும் இந்திய மத்திய அரசின் ஆதரவு கட்டாயமானது. அயலக தமிழர் நிகழ்வில் பங்குகொள்வதற்கான முட்டி மோதிக் கொள்ளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தை எந்தளவு தூரம் தமிழ் நாட்டு முதலமைச்சரின், ஏனைய அரசியல் தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றனர்? அயலக தமிழ் நிகழ்வு மேடையில் ஏன் இந்த விடயத்தை ஒரு பேசுபொருளாக்கவில்லை?

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னையை மனிதாபிமான நோக்கில் அணுகுமாறு கூறிவருகின்றது. இந்த நிலையில் மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டுமாயின், அத்துமீறுவதாக கருதப்படும் மீனவர்களை மனிதாபிமான கண்ணோட்டத்தில்தான் அணுகவேண்டும். இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கடந்த காலத்தில் பல இந்திய மீனவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். அதன் பிறகும் கூட மீனவர்கள் வடக்கு கடல் எல்லைக்குள் நுழையும் விவகாரம் முடிவுறவில்லை. மீனவர்கள் அவ்வப்போது உள்நுழைகின்றனர். கைதுசெய்யப்பட்டாலும் அவர்களின் உள்நுழைவை நிறுத்த முடியவில்லையாயின் இதற்கு தீர்வுதான் என்ன?

கூடி, சிறு கதைகள் பேசுவதால் இந்த விவாகரத்தை கையாள முடியாது - அதேபோன்று, ஆர்ப்பாட்டம், வீதிமறியல், கடலுக்குள் இறங்கி படகு சவாரி செய்தல் (கடந்த காலத்தில் அப்படியும் நடந்திருக்கின்றது) - இப்படியான விடயங்கள் எவையும் பலனளிக்கவில்லை. உண்மையில் இதற்கு தீர்வு இல்லை - அவ்வாறானதொரு தீர்வு இருக்க வேண்டுமாயின், அது இந்திய மத்திய அரசும் - இலங்கை அரசும் இதற்கான விசேட உயர்மட்ட பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். இது இணக்கமான தீர்வுக்கான முதல் படியாக இருக்க முடியும் - இது முதலாம் கட்ட பேச்சுவார்த்தை - இரண்டாம் கட்டம் என்றவாறு முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாது, அழுத்தம் கொடுக்கின்றோம் என்னும் பெயரில் வீதிகளில் சத்தமிடுவதால் இந்த விவகாரத்தை கையாள முடியாது. அதே வேளை உள்ளூர் அரசியலுக்கான கருவியாகவும் இதனைக் கையாளக் கூடாது. வடக்கு மாகாணத்தில் அதிகம் அவ்வாறான விடயங்கள்தான் கடந்த காலத்தில் நடந்திருக்கின்றது.

# கடலில் வைத்து மீனவர் மீது தாக்குதல்!

*யாழ்ப்பாணம், ஜன. 26*

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் நேற்றுக் காலை தாக்குதலுக்கு இலக்கான நபர், மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வத்திராயன் பகுதியை சேர்ந்த மத்தியாஸ் வின்சன் பெனடிக்ட் என்பவரின் வலைகள், கடலில் அறுத்தெறியப்பட்டவேளை, இன்னொரு படகில் வந்த நபர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது, வின்சன் பெனடிக்ட் என்பவரின் படகை, மற்றைய படகால் மூன்று தடவைகள் மோதி மூழ்கடிக்க முனைந்தார்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

படகில் இருந்து காயங்களுடன் தூக்கி எறியப்பட்ட வின்சன் பெனடிக்ட், கடலில் மூழ்கி உயிருக்கு போராடிய நிலையில், அவருடன் தொழிலுக்குச் சென்ற மீனவரால் காப்பாற்றப்பட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரை, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் பார்வையிட்டுள்ளார்.

இந்த நிலையில், மருதங்கேணி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நல்லூர் இளங்கலைஞர் மன்றம் புனரமைக்கப்பட்டு நேற்று திறப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 26*

புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. தொடர்ந்து இசை விழா நடைபெற்றது.

இந்த இசை விழா நிகழ்வு நாளை வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு மன்றத் தலைவரும் தமிழரசுக் கட்சியன் பதில் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கட்டடம் நேற்று காலை நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது. நேற்றைய நிகழ்வில் பிரதம விருந்தினாராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் சாயிமுரளியும், கௌரவ விருந்தினர்களாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், ஈழத்தின் மூத்த இசையமைப்பாளர் மு.கண்ணன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் ஈழத்தின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் மங்கல இசை, பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், புலம்பெயர் உறவுகள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வின்றேல் வீதிக்கு இறங்குவோம்!

## மகாவலி விவசாய சங்கம் எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 26*

விவசாயிகளின் பிரச்சினைக்கான தீர்வை வழங்காவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக வீதிக்கு இறங்கவும் தயங்க மாட்டோம் என தேசிய விவசாய கூட்டமைப்பின் பொலநறுவை மாவட்ட மகாவலி விவசாய சங்கத்தின் தலைவர் ஈ.ஜீ.தனவர்த்தன பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெள்ளப்பெருக்கின் காரணமாக 2 ஆயிரம் ஹெக்ரேயர் விவசாய நிலம் அழிவடைந்துள்ளது. இருப்பினும் அதற்கான இழப்பீட்டை வழங்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கை யையும் எடுக்கவில்லை.

ஒரு கிலோ கிராம் அரிசியை உற்பத்தி செய்வதற்கு 140 ரூபாய் செலவிட நேர்கின்றது.

ஆகவே பிரதி அமைச்சருடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது விவசாயிகளுக்கு குறித்த 140 ருபாவை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைவத்திருந்தோம்.

ஆனால் அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதன் காரணமாக 120 ருபாவிற்கு அரிசி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிலையே ஏற்படுகின்றது.

பிரதி அமைச்சர் நாமல் கருணாநிதி பதவிக்கு வருவதற்கு முன்பு, ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறினார். ஆனால் அந்த திட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தியதாக தெரியவில்லை.

அதனை இட்டு அமைச்சர் வெட்கமடைய வேண்டும். அரசாங்கம் அரிசியை கொள்வனவு செய்வதற்கு ஏதுவான எந்த திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை. ஆகவே விவசாயிகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்காவிட்டால் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக வீதிக்கு இறங்கவும் தயங்கமாட்டோம் - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமே வெற்றியின் எதிரி

முனைவர் என். பத்ரி

காலைப் பொழுதில் நமக்கு இருக்கும் மனநிலை, இரவு படுக்கும்போது நமக்கு இருப்பதில்லை. இது ஏழை, பணக்காரன் எல்லோருக்கும் பொருந்தும். இவற்றில் நேர்மறை உணர்வுகளும், எதிர்மறை உணர்வுகளும் அடங்கியுள்ளன. ஆனால் நேர்மறை உணர்வுகளைவிட, எதிர்மறை உணர்வுகள் நம் மனத்தின் மீது எளிதில் அதிக ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன என்பதுவே எதார்த்தமான உண்மை.

நமது சொந்த வாழ்விலும், தொழில் சார்ந்த வாழ்விலும் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகள் நமது மனநிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. அவற்றில் ஒன்றுதான்பயம். பயம் நமது வாழ்வின் சூழ்நிலைகளால் நம் மனதில் ஏற்படும் ஓர் எதிர்மறை உணர்வு ஆகும். அது நம் மனதில் ஒருவிதமான பதற்றத்தை உருவாக்கி நம்மைச் செயலற்றவர்களாக மாற்றி விடு கின்றது.

வாழ்வின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப இது மாறும் தன்மையுடையது. ஒழுங்காகப் படிக்காத குழந்தைக்கு பள்ளிக்குச் செல்வதற்கும், தேர்வுகளை எதிர்நோக்குவதற்கும் பயம். வாலிபப் பருவத்தில் படிப்புக்கேற்ற வேலை கிடைக்க வேண்டுமே என்னும் பயம். முதுமையில் நோயில் விழாமல் இருக்க வேண்டுமே என்ற பயம். இப்படி வாழ்நாள் முழுவதும் ஏதோ ஒரு பயம் நம்மை விரட்டிக் கொண்டே இருக்கிறது.

நமது மனம் அதிக ஓய்வில் இருக்கும்போது தேவையில்லாததை எல்லாம் நினைத்துக் கொண்டு இருக்கும். அப்போது ஏற்படும் எதிமறையான எண்ணங்கள் நம் மனதில் ஒருவித கலக்கத்தை ஏற்படுத்தும். அது நமது வாழ்வில் நடந்த அல்லது பார்த்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அது அமையலாம். அந்த உணர்வு சிறிது சிறிதாக வளர்ந்து, "பயமாக மாறிவிடும்.

பயம் நமது எதிர்கால நிகழ்வுகளைப் பற்றியது. பயம் ஏற்படும்போது கவலை, மனக்கலக்கம், நடுக்கம், திகில், பீதி போன்றவற்றை நாம் உணர்கிறோம். ஆபத்தான தருணங்களில் மனம் நமக்கு எச்சரிக்கையைத் தருகிறது. இந்த எச்சரிக்கையை நாம் அலட்சியப்படுத்தும்போது, நமது மனம் உணரும் அடுத்த கட்ட உணர்வே பயம் ஆகும். இந்த பயத்தை நாம் எவ்வாறு கையாள்கிறோம் என்பதுதான்முக்கியம். நம் உடலின் மீது பற்றற்றுப் போனால், பெரும்பாலான பயங்களில் இருந்து நம்மால் எளிதாக வெளிவர முடியும்.



பயம் என்பது வெளியே இருந்து கற்றுக் கொள்ளப்பட்டாலும், மனித வாழ்வின் ஓர் இயல்பான பகுதியாகவே கருதப்படுகிறது. நமக்குப் பழக்கமில்லாத எதைச் செய்தாலும் மூளை உருவாக்கும் உணர்வே பயம் ஆகும். இதை இயற்கையானது என்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் பயமே நமது வாழ்க்கையாகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம் மீது நம்மைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதே பயத்திலிருந்து வெளிவருவதற்கான முதல்படியாகும். என்ன விளைவு வந்தாலும் இந்த பயத்தைத் தாண்டி, எடுத்த செயலைச் செய்வதே வெற்றி என்று யோசிக்க வேண்டும். மனதில் உள்ளதை நெருங்கிய நட்பிடமோ, உறவுகளிடமோ சொல்லி மனதில் இருந்து பயத்தை வெளியேற்றலாம். இது நம் மனதிலுள்ள பயத்தின் தீவிர விளைவுகளைக் குறைக்கும். யோகாசனம் போன்ற மூச்சுப் பயிற்சிகளும், உடற் பயிற்சியும் நம் பயத்தைப் போக்க உதவும்.

எது நடந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்திற்கு நம் மனதைப் பழக்கிக் கொள்ள வேண்டும். நல்லதையே எண்ணுவதும், நல்லதையே செய்வதும் நற்பலன்களைத் தரும். நமக்கு நாமே உற்சாகமான மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மை ஆட்டி வைக்கும் பயத்தை புரிந்துகொள்ள, அதை எழுத்து மூலம் உருவகப் படுத்திக் கொள்ளலாம். அப்போது நாம் எப்படிக் காரணமில்லாமல் மனஉளைச்சல் மிகுந்து நம்மை நாமே தண் டித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

நடந்த சம்பவங்களை நம்மால் மாற்ற இயலாது. அதைப் பற்றி நினைத்து எந்த மாற்றமும் நிகழப் போவதில்லை என்று உணர வேண்டும். மனதைத் திடமாக வைத்து கொள்ளப் பழக வேண்டும். சில பயங்களுக்கான காரணங்களை நாம்அறிந்து கொண்டால்தான் அவற்றை நம் மனதிலிருந்து அகற்ற முடியும். அப்போதுதான் வருவதை தைரியமாக எதிர்கொண்டு வெற்றியுடன் வாழ முடியும்.

உலகத்தில் நாம் மாற்ற முடிகிற ஒரே நபர், நாம் மட்டும்தான். பயத்தை எதிர்கொள்ளும் வரை, வாழ்க்கை அந்த பயத்தைத் திரும்பத் திரும்ப நம்மிடம் திணித்துக் கொண்டே இருக்கும். இப்போது எதிர்கொள்ளவில்லை என்றாலும்,பின்னால் ஒரு நாள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டாலே, பயத்தை எதிர்கொள்ளும் மனத்திண்மை கிடைத்து விடும்.

உண்மையில் துன்பங்கள் நம்மை ஒன்றும் செய்வதில்லை. அவற்றின் விளைவுகள் பற்றிய கவலைதான் நம் மனத்தைக் கலக்கி பயத்தை ஏற்படுத்துகின்றன. நமது ஆற்றல்களை அதிகப்படுத்துவதற்கே துன்பங்கள் வருகின்றன. நமக்கு வரும் துன்பங்களை நாம் எதித்து நடத்தும் போராட்டத்தினால் நமது உள்ளம் வலிமை அடைகிறது.

பயத்தின் பிடியிலேயுள்ள எந்த மனிதனாலும் சிந்தித்துச் செயலாற்ற முடியாது. நம் வாழ்க்கையின் தலைவன் நாமேதான். நன்கு வாழ நமக்கு மன உறுதி வேண்டும். அதுமட்டும் போதுமான அளவு இருந்து விட்டால், வாழ்வின் எந்த நிலையிலும் நாம் வெற்றி பெற முடியும்.

'வாழ்க்கை என்பது ஒரு சுமை. அதைத் தாங்கிக் கொள். அது ஒரு முள்கிரீடம். அதை அணிந்து கொள்' என்கிறர். அப்ராம் ரியான். வாழ்க்கை என்பது சுமை என்று நாம் தெரிந்து கொண்ட பின் நாம் அச்சுமையைத் தாங்கி வாழத்தான் வேண்டும்.

துணிவினை தங்களது ஆயுதமாகக் கொண்டவர்கள் அனைவரும் வெற்றிபெற்று இருக்கிறர்கள் என்பதை நாம் உணர்ந்து செயலாற்றுவது நல்லது. பயமே நமது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் எதிரி. இதைத் தவிர்த்து செயல்பட்டால் நமது வாழ்வு சிறப்பாக அமையும்.

# இந்தவார ராசிபலன் 26.01.2025 - 01.02.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - தை 13
நல்ல நேரம்: 09.36 - 11.06 ராகு காலம் : 05.06 - 06.36 திதி : துவாதசி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய்மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். போட்டி பொறாமைகள் அதிகமாகும். எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். பண விஷயமான சிந்தனைகள் எழும். சிலர் காவல்துறை பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். செய்யும் தொழிலில் தடைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் மூலம் தொல்லை ஏற்படலாம்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். பூஜா வழிபாடுகளும், பெரியோர் ஆசிகள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி ள் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் ஒத்திப் போடுவது நல்லது. அவை பின்னர், வெற்றிகரமாக நடக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை ஒத்திப் போடுங்கள். சிலருக்கு வருமான வாய்ப்புகள் குறையும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். சிலருக்கு அதிக ஓய்வு கிடைக்கும். சகோதரரால் நன்மைகள் உண்டு. எனவே, கோபத்தை அடக்கி அவர்களுடன் ஒத்துப் போவது நல்லது. நண்பர்களுடன் வெளியே சுற்ற முடியாத நிலை ஏற்படலாம். பணமுடைகள் ஏற்படலாம். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வீட்டிலேயே இருக்க நேரும். சிலருக்கு, வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற தாமதங்கள் ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்காமல் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பீர்கள். திடீரென ஏற்படும். பயணங்களால் தொல்லைகள் எழும். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். துவக்கத்தில் கையில் எடுக்கும் காரியங்களில் எல்லாம் தடை, தாமதங்கள் ஏற்படும். பின்னர், வேலைகளை முடிக்க தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் உண்டு. தொழில் வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் தாமதப்படும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் நிம்மதி ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். சிலர், தனிமையில் உழல நேரலாம். வீட்டில் உறவுகளோடு, மகிழ்வதோடு, இருப்பதால், உள்ளம் மகிழும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுகமும், எதிர்பார்த்த பணவரவுகளும் குறையும். வீட்டில் இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைந்தாலும், திருமணம் தாமதமாகும். சிலர், வீட்டில் இருப்பதால் மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். வாகன வசதி குறையும். அரசுப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலமான நடவடிக்கைகள் மனதில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். பயணங்கள் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சியும் உண்டாகும்

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதங்கள் உண்டாகும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். சில சமங்களில், புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகனத்தில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் வீட்டில் இருப்பதால், அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, பொழுதை கழிப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி தாமதப்படும். புது வீடு கட்டிக் குடியேறும் காலம் தாமதமாகும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் தாமதப்படும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒன்றிணைந்து செயல்படுவதற்கான எதிரணிக் கட்சிகளின் முயற்சிகள்!



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான பலம் இருக்கின்ற போதிலும், ஆட்சிமுறையில் அகங்காரம் இல்லாத ஆரோக்கியமான ஒரு போக்கைக் காணக்கூடியதாக இருக்கிறது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் கொண்டிருந்த முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் ஆட்சிமுறையின் எதிர்மறையான அனுபவங்கள் எமது நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

முன்னைய போக்குகளில் இருந்து வேறுபட்ட முறையில் தங்களது ஆட்சிமுறை இருக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அரசாங்கத்தின் மற்றைய தலைவர்களும் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்ற போதிலும், மக்கள் கொண்டிருக்கும் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற முறையில் செயற்படுவதில் அரசாங்கம் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது என்பது





வெளிப்படையானது.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, தெற்கில் உள்ள பழைய கட்சிகளாக இருந்தாலென்ன, வடக்கில் உள்ள தமிழ்க்கட்சிகளாக இருந்தாலென்ன இரு தேசிய தேர்தல்களுக்கு பின்னரான புதிய அரசியல் சூழ்நிலையில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. தற்போது அவை இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றன.

இந்த முயற்சிகளினால் தற்போதைய அரசியல் நிலக்காட்சியில் எந்த உருப்படியான மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து வலுவான சந்தேகம் எழுகிறது. அதற்கு காரணம் எதிரணி கட்சிகளின் மக்கள் செல்வாக்கு தொடர்பான நிலைவரமேயாகும்.

நீண்டகாலமாக அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்த ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே.வி.பி.) இருந்த மக்கள் ஆதரவைக்கூட தற்போது கொண்டிருக்கவில்லை. அதற்கு அதன் தலைவர்களின் கொள்கைகளும் செயற்பாடுகளுமே பிரதான காரணம். அத்துடன் இரு கட்சிகளும் தொடர்ச்சியாக பிளவுகளுக்கு உள்ளாகின.

ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன எந்த வேகத்தில் மக்கள் மத்தியில் அமோக செல்வாக்கைப் பெற்று அதிகாரத்துக்கு வந்ததோ அதே வேகத்தில் அதிகாரத்தையும் ஆதரவையும் இழந்து விட்டது. தங்களிடமிருந்து விலகிப்போனவர்களை மீண்டும் வந்து இணையுமாறு ராஜபக்சாக்கள் வேண்டுகோள் விடுத்த போதிலும், எவரும் திரும்பிவந்ததாக இல்லை. அவர்களிடம் திரும்பிவருவதற்கான காரணமும் இல்லை.

ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திர கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவை எதிர்நோக்கும் நெருக்கடிகள் காரணமாக மாத்திரமே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குறைந்தளவு மக்கள் ஆதரவுடன் என்றாலும் இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக விளங்குகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அண்மைக் காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இரு தேசிய தேர்தல்களிலும் அடைந்த படுமோசமான தோல்விகளுக்கு பிறகு தங்களது பரிதாபமான நிலையை உணர்ந்து கொண்ட இரு கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் மீண்டும் இணைந்து செயற்பட்டால் எதிர்காலத் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு சவாலை தோற்றுவிக்க முடியும் என்று நம்புவதாக தெரிகிறது.

இணைந்து செயற்படுவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு விக்கிரம

நடைமுறைச் சாத்தியமான அரசியல் அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தவறியதன் காரணமாகவே வடக்கு தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள மறுப்பது துரதிர்ஷ்டவசமானது.


சிங்கவும் பிரேமதாசவும் காட்டியிருக்கும் சாதகமான சமிக்ஞைக்கு உடனடிக் காரணம் விரைவில் நடைபெறவிருப்பதாக நம்பப்படும் உள்ளூராட்சி தேர்தல்களேயாகும். இரு தலைவர்களுக்கும் இடையிலான தலைமைப் போட்டியையும் தன்னகம்பாவத்தையும் தவிர, இரு கட்சிகளும் தனித்தனியாக இயங்குவதற்கு எந்த அரசியல் அடிப்படையும் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க மூன்று தசாப்த காலமாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருந்து வருகிறார். அந்த கட்சியின் முன்னைய எந்த தலைவரும் விக்கிரமசிங்கவை போன்று மிகவும் நீண்டகாலமாக தலைமைத்துவத்தை வகித்ததில்லை. தேர்தல்களில் தொடர்ச்சியான தோல்விகள் மற்றும் கட்சியின் கட்டமைப்புகளின் சீர்குலைவுக்கு பின்னரும் கூட கட்சியின் தலைவர் பதவியை விட்டுச் செல்வதற்கு விக்கிரமசிங்க தயாராயில்லை. அதேவேளை, அவரைத் தவிர, வேறு உருப்படியான தலைவரைக் கண்டுபிடிக்கவும் முடியாத பரிதாப நிலையில் அந்த கட்சி இருக்கிறது.

தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளுக்கு ஐக்கிய தேசிய கட்சியை வழிநடத்திய விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு எதிராக கட்சிக்குள் கிளர்ச்சி செய்து களைத்துப்போன பின்னரே சஜித் பிரேமதாச 2020 பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக புதிய கட்சியை அமைத்தார். விக்கிரமசிங்கவுடன் இருந்தால் தேர்தல்களில் வெற்றிபெற முடியாது என்ற ஒரே காரணத்துக்காகவே ஐக்கிய தேசிய கட்சியின் பெரும்பாலான அரசியல்வாதிகள் பிரேமதாசவுடன் இணைந்தார்கள்.

தேர்தல் தோல்விகளை காரணம் காட்டி விக்கிரமசிங்கவிடமிருந்து ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை தனக்கு தரவேண்டும் என்று கேட்ட பிரேமதாசவும் இப்போது இரு ஜனாதிபதி தேர்தல்களில் தோல்வியைக் கண்டு விட்டார். இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் மிகவும் கூடுதலான காலம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த விசித்திரமான பெருமைக்குரியவர் விக்கிரமசிங்க. இப்போது பிரேமதாசவும் இரண்டாவது தடவையாக எதிர்க்கட்சி தலைவராக இருக்கிறார். அவரது அரசியல் அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அவரும் தனது முன்னாள் தலைவரை போன்று நீண்டகாலம் எதிர்க்கட்சி தலைவராக இருக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

விக்கிரமசிங்கவின் தலைமைத்துவ பாங்கில் அடையாளம் காணப்பட்ட அதே குறைபாடுகளுக்காக தற்போது பிரேமதாச மீதும் ஐக்கிய மக்கள் சக்திக்குள் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி ஓரளவுக்கேனும்





பலமானதாக இருந்தால் பிரேமதாசவை கைவிட்டு பெரும்பாலான அரசியல்வாதிகள் எப்போதோ விக்கிரமசிங்க பக்கத்துக்கு வந்திருப்பார்கள். மாற்றுவழியில்லாத காரணத்தினாலேயே அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும் இருக்கிறார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் சேர்ந்த அரசியல்வாதிகள் இணைந்து செயற்படுவதற்கு விரும்பினாலும் கூட, விக்கிரமசிங்கவுக்கும் பிரேமதாசவுக்கும் இடையிலான தன்னகங்கபாவ போட்டி அந்த முயற்சிகளுக்கு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த வருடத்தைய ஜனாதிபதி தேர்தலில் இருவரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து அவர்களில் ஒருவர் போட்டியிட்டிருந்தால் அநுர குமார திசாநாயக்க நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கமாட்டார். மக்கள் செல்வாக்கை இழப்பதற்கான சகல அம்சங்களும் தன்னகம்பாவத்தில் இருக்கிறது என்பதற்கு அரசியலில் விக்கிரமசிங்கவும் பிரேமதாசவும் பிரகாசமான உதாரணங்கள்.

அதேவேளை, அவர்கள் இருவரின் தலைமையிலும் அமையக்கூடிய எந்தவொரு கூட்டணியும் மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய சாத்தியம் பெரும்பாலும் தற்போதைய சூழ்நிலையில் இல்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் பாரிய எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்த மக்கள் பொருளாதார இடர்பாடுகளில் தணிவைக் காணமுடியாத நிலையில் அரசாங்கத்தின் மீது ஓரளவு அதிருப்தியடைகிறார்கள் என்பது உண்மையே. ஆனால், பொருளாதார நெருக்கடி உட்பட இன்றைய சகல பிரச்சினைகளுக்கும் காரணமான தவறான ஆட்சிமுறைக்கு பொறுப்பான பழைய கட்சிகள் எந்த புதிய கோலத்தில் வந்தாலும் மக்கள் ஆதரிப்பார்கள் என்று கூறமுடியாது.

முன்னைய காலத்தைப் போன்று தற்போது மக்கள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கே நெடுகவும் விசுவாசமாக இருப்பதாக கூறமுடியாது. மக்களிடம் இன்று நிரந்தரமான அரசியல் விசுவாசங்கள் இல்லை. அதன் காரணத்தினால் தான் ஐந்து வருடங்களுக்கு முன்னர் மூன்று சதவீதமான வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 43 சதவீதமான வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்தது. விக்கிரமசிங்கவும் பிரேமதாசவும் ஜனாதிபதி தேர்தல்களில் பெற்ற வாக்குகளை அவர்களின் தலைமையிலான கூட்டணிகளினால் பாராளுமன்ற தேர்தலில் பெறமுடியவில்லை.

இதுகாலவரை மற்றைய கட்சிகள் பெற்ற வாக்குகளே பெருமளவில் தேசிய மக்கள் சக்திக்கு கடந்த இரு தேர்தல்களிலும் கிடைத்தது. அதனால், இலங்கை பாராளுமன்ற அரசியல் காணாத பெரும்பான்மைப் பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய மக்கள் வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றுவதில் காண்பிக்கும் நேர்மையையும் அக்கறையையும் பொறுத்தே அதற்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவார்கள் என்பதை ஜனாதிபதி திசாநாயக்கவும் அரசாங்க தலைவர்களும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சர்வதேச உதவிகளை அவற்றின் தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யவேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

அதிகாரத்துக்கு வந்து நான்கு மாதங்களுக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்க்கட்சிகளிடம் இருந்து கடுமையான விமர்சனங்களையும் நாட்டையும் அதன் பொருளாதாரத்தையும் மீட்டெடுப்பதற்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதில் அதன் ஆற்றல் தொடர்பான சந்தேகங்களையும் அதிகரித்த வகையில் எதிர்நோக்குகின்றது. ஊடகங்களில் வெளியாகும் கவனத்தை ஈர்க்கும் செய்திகள் பெரும்பாலும் அரசாங்க தலைவர்களின் கடந்த கால தவறுகள் அல்லது குறைபாடுகளுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. அவற்றில் சில புதிய கொள்கை வகுப்பாளர்களின் அனுபவமின்மையுடன் தொடர்புடையவையாக உள்ளன. அவர்களில் பலர் அரசியல் அல்லது பொது நிருவாகத்தை விடவும் கல்வித் துறையில் தங்களது வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டவர்களாக இருக்கிறார்கள்.

பொருளாதார கஷ்டங்கள் தொடர்பான விமர்சனங்களே மக்களுக்கு உண்மையானவையாக தெரிகின்றன. அந்த கஷ்டங்களை மக்கள் முழு அளவில் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த பல தசாப்தங்களாக தங்களது செயற்பாடுகளின் மூலமாக 2022 ஆம் ஆண்டின் பொருளாதார அனர்த்தத்துக்கு காரணமாக இருந்தவர்கள் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கான நம்பகத்தன்மையை கொண்டவர்கள் அல்ல.

ஊழல் இல்லாத அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதி தொடர்பில் அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு தொடர்ந்து இருந்து வருகிறது. ஊழலைக் கட்டுப்படுத்துவதிலும் கடந்த கால துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் அரசாங்கம் நேர்மையாக இருக்கிறது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் தொடர்ந்து இருக் கிறது.

ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தி மக்கள் மீதான சுமையை குறைப்பதாக தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிகள் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்படாதது குறித்து ஏமாற்றமும் மக்கள் மத்தியில் நிலவுகிறது. பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான வெளி தொடர்ந்து விரிவடைந்து கொண்டே போகிறது. அரிசி ஆலை உரிமையாளர்களும் ஹோட்டல்களும் பெரிய இலாபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, நிலையான வருமானத்தைக் கொண்டவர்களும் தங்களது குடும்பத் தேவைகளுக்காக விவசாயம் செய்பவர்களும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகளினால் வீழ்ச்சியடைந்த ஒரு பொருளாதாரத்தை பொறுப்பேற்றதே அரசாங்கத்தின் அடிப்படைப் பிரச்சினையாகும். சர்வதேச நாணய நிதியத்துடனும் சர்வதேச பிணைமுறியாளர்களுடனும் முன்னைய அரசாங்கம் செய்துகொண்ட உடன்படிக்கைகள் பேரம் பேசுவதில் இலங்கையின் பலவீனமான நிலையைப் பிரதிபலித்தன. அதன் காரணத்தினால்தான் கடன் மறுசீரமைப்பின்போது மற்றைய நாடுகள் 50 சதவீத கடன் குறைப்பைப் பெற்றுக் கொண்ட அதேவேளை இலங்கை 20 சதவீத கடன் குறைப்பை பெற்றது.

இந்த நிலைவரத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாது. நாம் எதிர்நோக்கும் சிக்கலான பொருளாதார சூழ்நிலையில் இருந்து எம்மை பெருந்தன்மையான ஒரு கொடையாளி விடுவிப்பார் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயங்களின்போது இலங்கை கொண்டிருந்த யதார்த்தபூர்வமற்ற எதிர்பார்ப்புகளின் மூலமாக தெளிவாகத் தெரிந்தது.

சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் 1848 ஆம் ஆண்டில் பிரிட்டனின் 19 ஆம் நூற்றாண்டு பிரதமர்களில் ஒருவரான பால்மேர்ஸ்ரன் பிரபு "எமக்கு



நிரந்தரமான நண்பர்களும் இல்லை, நிரந்தரமான எதிரிகளும் இல்லை. எமக்கு நிரந்தரமான நலன்களே இருக்கின்றன. அந்த நலன்களை பேணிக்காப்பதே எமது கடமை" என்று கூறியிருந்தார். பிரிட்டனின் வெளியுறவுக் கொள்கையை நியாயப்படுத்த அளித்த விளக்கத்திலேயே அவர் அவ்வாறு கூறினார். ஒரு நாட்டின் தீர்மானங்கள் மற்றைய நாடுகள் மீதான நிலையான விசுவாசங்களினாலோ அல்லது கோட்பாடுகளினாலோ அன்றி அதன் மூலோபாய நலன்களினாலேயே வழிநடத்தப்படுகின்றன என்பதே அவரின் கூற்றின் அர்த்தம்.

ஐரோப்பாவில் முற்போக்கு புரட்சிகளை ஆதரித்த அதேவேளை உலகின் வேறு பாகங்களில் காலனித்துவ ஆதிக்கத்தை பேணிக்காத்தமை போன்ற பிரிட்டனின் சர்ச்சைக்குரிய கூட்டணிகளையும் தலையீடுகளையும் அவரின் அந்த வாதம் நியாயப்படுத்தியது. இன்று சர்வதேச சமூகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற சீரற்ற சட்ட மற்றும் தார்மிக நியமங்கள் மூலமாக இதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

மற்றைய நாடுகளுடன் இலங்கை ஊடாட்டங்களைச் செய்யும்போது பால்மேர்ஸ்ரன் பிரபுவின் கட்டளையை மனதில் வைத்திருக்க வேண்டியது முக்கியமாகும். சட்டத்தின் ஆட்சி மற்றும் உலகளாவிய மனித உரிமைகளில் நம்பிக்கை வைத்திருப்பதாக கூறிக்கொண்ட நாடுகளின் நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க ஒரு நகர்வு ஏற்பட்டிருப்பதை கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்தில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இரண்டாவது உலகப்போரில் வெற்றி பெற்ற வல்லாதிக்க நாடுகள் சர்வதேச அரங்கில் அவற்றின் ஊடாட்டங்களில் மனித உரிமைகளில் தாராளவாத பண்புகள், ஜனநாயகம் மற்றும் நீதிக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்த ஒரு நீண்ட காலம் இருந்தது.

ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் மற்றும் சர்வதேச நீதிமன்றம் உட்பட பல நிறுவனங்களையும் அந்த வல்லாதிக்க நாடுகள் ஒன்றுசேர்ந்து அமைத்துக் கொண்டன. ஆனால், இன்று அந்த தாராளவாத சர்வதேச ஒழுங்கு சிதறுப்பட்டு விட்டது. ஈராக், லிபியா, சிரியா, உக்ரெயின் மற்றும் பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் காணக்கூடியதாக இருக்கும் நிகழ்வுகள் பலவீனமான நாடுகளுக்கு எதிரான பலமான நாடுகளின் காட்டு மிராண்டித்தனமான நடத்தைகளை பிரதிபலிக்கின்றன.

தற்போது வெளிக்கிளம்புகின்ற எதேச்சாதிகார சர்வதேச ஒழுங்கை நோக்கி உலகளாவிய அதிகாரம் நகருவதால் தாராளவாத சர்வதேச ஒழுங்கு அதன் பிடியை இழக்கின்றது என்று ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒலிவர் றிச்மண்ட் போன்ற சர்வதேச கல்விமான்கள் கூறுகிறார்கள். உலகின் முக்கிய முரண்நிலைகளை தீர்த்துவைப்பதற்கு தாராளவாத சர்வதேச ஒழுங்கு தவறியதில் இருந்து அதன் பலவீனம் எவ்வாறு அம்பலப்பட்டது என்பது குறித்து ஒலிவர் றிச்மண்ட் எழுதியிருக்கிறார்.

> வெளிநாடுகள் எமக்கு தருவதற்கு முன்வருகின்ற ஒவ்வொரு உதவியையும் இலங்கையும் அதன் தலைவர்களும் குடிமக்களும் யதார்த்தபூர்வமான ஒரு முறையில் நோக்கவேண்டும். ஒவ்வொரு உதவியையும் அதன் தகுதியின் அடிப்படையிலேயே மதிப்பிட வேண்டும். வெளிநாடுகள் எமக்கு உதவுவதற்கு பெருந்தன்மையே உந்துதலாக இருப்பதாக நாம் நினைத்து விடக்கூடாது.

சைப்பிரஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகள் போன்ற தொடர்ச்சியான தோல்விகள் மற்றும் இஸ்ரேல் - பாலஸ்தீன நெருக்கடியில் ஒஸ்லோ உடன்படிக்கைகளின் முறிவு போன்றவை மேற்கத்தைய ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறைமையின் மட்டுப்பாடுகளை வெளிச்சம்போட்டுக் காட்டியது. தாராளவாத பண்புகளுக்கு மேலாக அரச இறைமை மற்றும் அதிகாரத்துக்கு வெளிப்படையாக முன்னுரிமை கொடுக்கும் சீனா, ரஷ்யா போன்ற வல்லாதிக்க நாடுகளின் எழுச்சி ஒரு பல்துருவ எதேச்சாதிகார சர்வதேச ஒழுங்குக்கான நகர்வைக் குறித்து நிற்கிறது. இதில் மற்றைய நாடுகளுக்கு பாதிப்பாக அமைந்தாலும் கூட ஒவ்வொரு நாடும் தனக்கு உச்சபட்ச அனுகூலத்தை அடைய முயற்சிக்கிறது.

தாராளவாத சர்வதேச ஒழங்காக இருந்தாலென்ன அல்லது எதேச்சாதிகார சர்வதேச ஒழுங்காக இருந்தாலென்ன இரண்டுமே நீதி அல்லது சமத்துவத்துக்கான இரு பற்றுறுதியை விடவும் புவிசார் அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அவை நிலைபேறான சமாதானத்தைக் கொண்டு வரக்கூடியவையாக அமைந்திருக்கவில்லை என்று பேராசிரியர் றிச்மண்ட் எச்சரிக்கை செய்கிறார்.

தாராளவாத சர்வதேச ஒழுங்கு அதன் நோக்கு என்று முன்னர் வெளிக்காட்டி நின்ற சமாதான முயற்சிகளின் விளைவான மனித உரிமைகள், அபிவிருத்தி, தாராளவாதம் மற்றும் ஜனநாயகமும் அரசியல் சீர்திருத்தமும் எதேச்சாதிகார சர்வதேச ஒழுங்கின் ஆதரவாளர்களினால் தற்போது முரட்டுத்தனமாக திணிக்கப்படுகின்ற புவிசார் அரசியல் சமநிலைப்படுத்தல் மற்றும் எதேச்சாதிகார முரண்நிலை முகாமைத்துவத்தை விடவும் சாதாரண மக்களுக்கு நீதியானதும் நிலைபேறானதுமாகும். நேர்மைக்கும் நிலைபேறுக்கும் முன்னுரிமை கொடுக்கின்ற ஒரு புதிய அணுகுமுறை இல்லாத பட்சத்தில் உலகம் மேலும் பிளவுக்கும் உறுதிப்பாடின்மைக்கும் உள்ளாகும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்று அவர் வாதிடுகிறார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு இந்தியாவிலும் சீனாவிலும் வழங்கப்பட்ட அரச வரவேற்பை தொடர்ந்து அவ்விரு நாடுகளிடமிருந்தும் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒரு பெரும் ஊக்குவிப்பைத் தரக்கூடிய ஆதரவு கிடைக்கப்போகிறது என்ற பெரும் எதிர்பார்ப்பு இருக்கிறது. பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் 2022 ஆம் ஆண்டில் முன்னென்றும் இல்லாத வகையில் இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற 400 கோடி டொலர்கள் பொருளாதார ஆதரவுக்கு பிறகு சீனாவிடமிருந்து வரப்போவதாக ஊடகங்களில் கூறப்படும் சுமார் 1000 கோடி டொலர்கள் முதலீடு பெரும் நம்பிக்கையை தருகிறது.

இந்தியாவும் சீனாவும் துரித பொருளாதார அபிவிருத்தியையும் சுய நிலைபேற்றுத்தன்மையையும் நோக்கி இலங்கை முன்னேறக்கூடியதாக அதன் பொருளாதாரத்தை மாற்றும் வல்லமை கொண்ட இரு அயல் நாடுகள். உலகில் பொருளாதார ஆசியாவை நோக்கி உலகம் நகருகின்ற சூழ்நிலையில் இத்தகைய நிலைவரம் தோன்றியிருக்கிறது.

இந்தியாவும் சீனாவும் இலங்கை தங்களது சுற்றுப்பாதைக்குள் வரவேண்டும் என்று அக்கறை கொண்டிருக்கின்றன. சீனாவும் இந்தியாவும் குறிப்பாக பாதுகாப்பு விவகாரங்களைப் பொறுத்தவரை, ஒன்றுடன் ஒன்று வலுவான போட்டியையும் ஐயுறவுகளையும் கொண்ட நாடுகளாகும். இராணுவ மோதல்களுக்கு வழிவகுத்த எல்லைத் தகராறுகள் இரு நாடுகளுக்கும் இடையில் இருக்கின்றன. பேராசிரியர் ஒலிவர் றிச்மண்ட் கூறியிருக்கின்ற எதேச்சாதிகார சர்வதேச ஒழுங்கு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நடத்தைகள் மீதும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரநாயக்கவின் சிங்கள 'ஸ்ரீ'யிலிருந்து இந்தியாவின் திருவள்ளுவர் மையம்வரை: தொடரும் மொழி அடையாளப் போர்!

பனங்காட்டான்

ஈழத்தமிழரின் ஒரு நூற்றாண்டுகால வாழ்வியலைத் திரும்பிப் பார்க்கின் எந்தவொரு நியாயத்துக்காகவும் நீதிக்காகவும் அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டேயிருப்பவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதனால் இவர்களை போராடப் பிறந்தவர்கள் என்றும் சொல்லலாம்.

உரிமை மறுக்கப்படுவது, இருக்கும் அற்ப சொற்ப உரிமைகளையும் மறுப்பது, ஒடுக்கப்படுவது, நசுக்கப்படுவது, கைது செய்வது, காணாமலாக்கப்படுவது, கொல்லப்படுவது என்ற தொடரில் அவர்கள் நிலவுடமை பறிக்கப்படுவது, திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், இராணுவ முற்றுகை என்று தமிழர்களின் தொடர் போராட்டத்துக்கு நூறுக்கும் அதிகமான காரணங்கள் உண்டு.

சிலவேளைகளில் தேவையற்ற சில நெருக்குவாரங்களை தெரிந்தோ தெரியாமலோ சிலர் மேற்கொள்ளும்போது அதிலிருந்து விடுபடவும் போராட வேண்டியுள்ளது. தற்போது, யாழ்ப்பாணத்தில் இந்தியா நிர்மாணித்துக் கொடுத்த பொது மண்டபத்தின் பெயர் மாற்றம் அவ்வாறான ஒரு நிலைமையை மெதுவாக உருவாக்கியுள்ளது.

1931ம் ஆண்டு இலங்கையின் சட்ட சபைத் தேர்தலை யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் பகிஷ்கரித்து நடத்திய போராட்டத்தையே ஈழத்தமிழர்களின் முதலாவது போராட்டம் என்று வரலாறு பதிவு செய்துள்ளது. 1927ம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட மகாத்மா காந்தி இந்தியாவில் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தின் வடிவமே யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் நடத்திய தேர்தல் பகிஷ்கரிப்பு போராட்டம் என்று தென்னிலங்கை குற்றஞ்சாட்டியது.

ஆனால், தேர்தல் பகிஷ்கரிப்பு வேளையில் ஜவகர்லால் நேரு தமது விடுமுறையை கழிப்பதற்காக இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தை காரணம் காட்டி, அவரால்தான் தமிழரின் தேர்தல் பகிஷ்கரிப்பு இடம் பெற்றதென அப்போது எவரும் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடவில்லை. இன்று, திருவள்ளுவர் பெயரிலான யாழ்ப்பாணத்து மண்டபம் என்ற விவகாரம் தொடர்ந்து செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமலில்லை.

இந்திய மத்திய அரசின் நன்கொடையாக அந்நாட்டு நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டு 2023இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியாலும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசங்கவினாலும் திறந்து வைக்கப்பட்ட இந்த மண்டபத்துக்கு 'யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. (இது பேருந்து தரிப்பு மத்திய நிலையம் போன்ற வாசத்தைக் கொண்டது). கடந்த மாதம் 18ஆம் திகதி அநுர அரசின் பிரதியமைச்சரும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் கலந்து கொண்ட விழாவில் யாழ்ப்பாணம் என்ற பெயர் அகற்றப்பட்டு திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர்ப்பலகை திறக்கப்பட்டது.

இப்பெயர் மாற்றத்துக்கு யாழ்ப்பாணத்திலுள்ள சில அரசியல்வாதிகளும் வேறு சிலரும் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இது தொடர்பாக ஆராய்ந்த தமிழரசுக் கட்சி அதன் பதில் தலைவரான சி.வி.கே.சிவஞானத்திடம் இதனைக் கையாளும் பொறுப்பை ஒப்படைத்தது. இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்வு விடயத்தில் இந்தியாவின்




பங்களிப்பு அவசியமென்பதால் இந்தியாவைப் பகைக்காமல் மென்போக்கில் நிலைமையைக் கையாளுமாறு சிவஞானத்திடம் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண முதலமைச்சராகவிருந்த சி.வி.விக்னேஸ்வரனை பதவி நீக்கம் செய்யும் தீர்மானக் கடிதத்தை அன்றைய வடமாகாண ஆளுனரிடம் கையளிப்பதை திடீரென தமது கையுள் சுமந்திரன் ஆதரவாளர்கள் திணித்ததாக அன்று திரு. சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தமை ஞாபகம் இருக்கிறது. அதுபோன்றே இப்போதும் திருவள்ளுவர் மைய விவகாரம் தம்மிடம் திணிக்கப்பட்டதாக இவர் கூறுவாரென நினைக்கவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்த 13ஆம் திருத்தத்தை இதுவரை ஒப்பேற்றத் தவறி வரும் இந்தியா இவ்விடயத்தில் இலங்கை அரசுக்கும் ஈழத்தமிழருக்கும் பெப்பே காட்டி வருவதுபோல அதனது யாழ்ப்பாணக் கட்டடத்துக்கு 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்' என பெயர் சூட்டியுள்ளது.

நிலம் யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமானது. கட்டிடத்துக்கான நிதி இந்திய அரசினுடையது. கட்டிடத்தின் பெயர் திருவள்ளுவர் பண்பாட்டு மையம். திறக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குள் சூட்டப்பட்ட மூன்றாவது பெயர் இது. இவ்வாறு கூறுவதால் ஈழத் தமிழர்கள் திருவள்ளுவரை விரும்பாதவர்கள் என்று அர்த்தமில்லை. பல வருடங்களுக்கு முன்னர் தொடர்ந்து திருக்குறள் மாநாடு வடமாகாணத்திலேயே இடம்பெற்று வந்தது. ஈழத்தமிழ் மண்ணில் இம்மாநாட்டை நடத்தியவர் பண்டிதர் கா.பொ.இரத்தினம். இவர் கிளிநொச்சி மற்றும் ஊர்காவற்றுறை தொகுதிகளின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் இருந்தவர். திருவள்ளுவருக்கு வருடாந்தம் பிரமாண்டமான விழாக்களை எடுத்த பெருமகனார் இவர்.

பண்டிதர் க.பொ.இரத்தினம் அவர்கள் வள்ளுவம் ஊடாக தமிழ்மொழியை ஏற்றியும் போற்றியும் வளர்த்தவர். 1970களில் கொழும்பு ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தின் (லேக்ஹவுஸ்) நாடாளுமன்ற செய்தியாளராக நான் கடமையாற்றியவேளை பண்டிதரை அடிக்கடி சந்திப்பதுண்டு. நாடாளுமன்ற அமர்வின் எல்லாவேளையிலும் இவர் எழுப்பும் கேள்வி தமிழ்மொழிப் பயன்பாடு சம்பந்தமானது. முக்கியமாக, இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துகளிலும், தபால் நிலையங்கள், ரயில் நிலையங்களிலும் பெயர்ப்பலகைகளில் இடம் பெற்ற தமிழ்க் கொலைகளை சுட்டிக் காட்டி சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் விளக்கம் கோருவார். இதனால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இது தொடர்பான விபரங்கள் பண்டிதர் இரத்தினத்துக்கு தபால் மூலம் வந்து சேரும். அவர் இன்றிருப்பாராயின் யாழ்ப்பாண இந்திய மண்டபத்துக்கு நேர்ந்த கதிக்கு நேர்த்தியாக பதிலளித்திருப்பார். வளைந்து நெளிந்து கேள்வியெழுப்பும் பாணி அவருக்கு ஒத்து வராதது.

இரண்டாண்டுகளில் மூன்று தடவை பெயர் மாற்றம் கண்ட இக்கட்டடத்துக்கு என்றோ ஒரு நாள் நரேந்திர மோடி மையம் அல்லது ஆட்சி மாற்றம் ஏற்படின் ராஜிவ் காந்தி மையம் என்று பெயர் மாற்றம் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மையம் என்பதற்கு உடலம் என்றும் ஓர் அர்த்தமுண்டு. இன்றைய நிலையில் இவ்வாறான விடயங்களில் முற்கூட்டியே செயற்பட வேண்டிய தமிழர்களின் தலைமை அரசியலமைப்பான தமிழரசுக் கட்சி இவ்விடயத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்த முடியாது சிதறுண்டு கிடக்கிறது. கட்சிக்கான தலைவரும் பொதுச்செயலாளரும் தற்காலிகமானவர்கள். (இதற்குப் பதில் என்று பெயர் சொல்லப்படுகிறது). கட்சியின் எதிர்காலம் நீதிமன்றத் தீர்ப்பில் தங்கியிருக்கிறது. தீர்வு எவ்வாறு வந்தாலும் பிரச்சனை தீரும் போல் இல்லை.

கட்சித் தலைவர் பதவியில் வெற்றி பெற்ற சிவஞானம் சிறீதரனும் படுதோல்வி கண்ட சுமந்திரனும் இப்போதும் அந்தக் கதிரையில் கண் வைத்தவாறே மோதிக்கொண்டிருக்கிறார்கள். உட்கட்சி மோதல் கட்டுநாயக்க விமான நிலையமூடாக நகர்ந்து நாடாளுமன்றத்தின் படியேறியுள்ளது. தமிழகத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்கு விமானம் ஏறச்சென்ற சிவஞானம் சிறீதரன் தாம் தடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் பயணம் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியாயம் கோரியிருக்கிறார்.

அதேசமயம், இவ்விவகாரம் தொடர்பாக முன்னாள் எம்.பி.சுமந்திரன் ஊடகமொன்றுக்குத் தெரிவித்த கருத்துக்கு விசாரணையும் கேட்டுள்ளார். உரிய விசாரணை இடம்பெறுமென அநுர அரசாங்க தரப்பு நாடாளுமன்றத்தில் பதிலளித்துள்ளது. இப்போது தமிழரசுக் கட்சியின் தெரிவான தலைவரும் அப்பதவிக்குத் தெரியப்படாதவரும் தங்கள் போராட்டத்தை நாடாளுமன்றம் ஊடாக சகலருக்கும் தெரிய வைத்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காலத்தை இது நினைவூட்டுகிறது. பார்க்கப் போனால் தமிழரசுக் கட்சியை அழிப்பதற்கு வெளியிலிருந்து யாரும் வரவேண்டியதில்லை. உள் இருப்பவர்களே போதும்.

1968ல் அடையாள அட்டை மசோதாவின்போது அமிர்தலிங்கத்துக்கும் காவலூர் வி. நவரத்தினத்துக்குமிடையிலான மோதல், 1977 பொதுத்தேர்தலின்போது அமிர்தலிங்கத்துக்கும் மட்டுநகர் செல்லையா இராஜதுரைக்கும் இடையிலான மோதல் போன்று சுமா - சிறீதரன் மோதலும் வளர்ச்சி பெற்று வருவது தெரிகிறது. உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமாயின் அப்போது இப்பிரச்னையைக் கையாளும் நிலையில் நிரந்தரத் தலைவரும் செயலாளரும் இல்லாத தமிழரசுக் கட்சி என்ன செய்யப்போகிறதோ தெரியவில்லை.

அதுவரை விவகாரத்தை ஒத்தி வைத்துவிட்டு தமிழர்களின் தொடர் போராட்டத்தினை மேலும் பார்க்க வேண்டியுள்ளது. திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் மாற்றம் மொழிவழி கலந்த பண்பாட்டு மாற்றமாகும். இலங்கைத் தமிழர்களின் மொழிவழிப் போராட்டம் பண்டாரநாயக்க ஆட்சியின்போது திணிக்கப்பட்ட சிங்கள 'ஸ்ரீ' எழுத்துடன் ஆரம்பமானது. அரச வாகனங்களிலும் தனியார் வாகனங்களிலும் இலக்கத் தகடுகளில் ஆங்கிலத்திலான எழுத்துகளுக்குப் பதிலாக சிங்கள 'ஸ்ரீ'யை புகுத்தியதால் 1958 மார்ச் மாதம் 29ம் திகதி அதற்கான எதிர்ப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் இளையோர் சிங்கள ஸ்ரீ எழுத்துகளை தார்களால் அழித்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

அன்று தமிழ் இளையோர் மேற்கொண்ட எழுச்சி, அரசியல் நோக்கம் கொண்டதல்ல. சிங்கள மொழிக்கோ சிங்கள இனத்துக்கோ எதிரானதல்ல. தங்கள் இன அடையாளத்தை அழித்து இன்னொரு மொழியைத் திணிக்கும் அரச வன்முறைக்கெதிரான உரிமைப் போராகவே காணப்பட்டது.

இந்த எழுச்சிப் போராட்டம் 1961ல் தமிழர் தாயகத்தில் அரசுக்கெதிரான சத்தியாக்கிரக போராட்டத்துக்கு வழிகாட்டியாக அமைந்தது. 1970ல் அரச பயங்கரவாதத்தை, ஆயுதங்களை ஆயுதங்களால் சந்திக்கும் போராட்டத்துக்கும் இதுவே வழிகோலியது.

ஈழத்தமிழரின் பண்பாட்டு தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம் என்ற பெயரோடு கால் பதித்த இந்தியா இப்போது திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என பெயர் மாற்றி அரசியல் செய்வதைப் பார்க்கும்போது 1987ல் அரிசி - பூசணிக்காய் பொதியோடு விமானம் வழியாக பயணித்ததே நினைவுக்கு வருகிறது.


ஈழத்தமிழருக்கு இன்று தேவையானது கட்டிடங்களோ, பெருந்தலைவர்கள் பெயர்களிலான விழாக்களோ, இறக்குமதியாகும் பட்டிமன்றங்களோ அல்ல. உயிருக்கும் உரிமைக்குமான உத்தரவாதமும் நிலத்துக்கான பாதுகாப்புமே இன்று வேண்டப்படுபவை. அன்பளிப்புக் கட்டிடடங்கள், மண்டபங்கள் என்ற பெயரில்கூட நிலத்தை பறிகொடுக்க முடியாது. •

**1957ல் பண்டாரநாயக்க திட்டமிட்டு உருவாக்கிய சிங்கள ஸ்ரீ போராட்டத்திலிருந்து, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்வரை தமிழரின் மொழிவழி உரிமைப்போர் தொடர்கிறது. நிலத்தையும் மொழியையும் காப்பதற்கான நிலையிழந்து உட்கட்சி அரசியலில் மோதிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி இதனை எவ்வாறு கையாளப்போகிறது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா தொடர்பான பார்வையை ஜனாதிபதி மாற்றிக் கொண்டுள்ளாரா?

- ரஞ்சன் அருண் பிரசாத்



சீன எதிர்ப்பு கொள்கைகளை வெளிப்படுத்திய மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஆட்சி பீடம் ஏறிய தருணம் முதல் சீன ஆதரவு கொள்கையை கடைபிடிக்க ஆரம்பித்துள்ளது என எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் கடந்த 17-ஆம் தேதி இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, அநுர குமார திஸாநாயக்க கடந்த காலங்களில் சீனாவிற்கு எதிராக வெளியிட்ட கருத்துக்கள் அடங்கிய வீடியோவைக் காண்பித்து கருத்து வெளியிட்டார்.

2021-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி, அப்போதைய எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது அநுர குமார திஸாநாயக்க சீனா தொடர்பாக வெளியிட்ட கருத்தை, ஹர்ஷன ராஜகருணா ஒளிபரப்பு செய்து காண்பித்தார்.

"சீன பிராந்தியமாக மாற்றும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது. ஹாங்காங் தொடர்பாக சீனாவின் திட்டமும் இதே தான். சீன ஹாங்காங் திட்டமே, கொழும்பு துறைமுக நகர் திட்டமாக அமைந்துள்ளது" என அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அநுர குமார திஸாநாயக்க, இலங்கை ஜனாதிபதியாக பதவியேற்ற நிலையில், சீனாவிற்கு விஜயம் செய்தபோது வெளியிட்ட கருத்தையும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா சுட்டிக்காட்டி வீடியோவை ஒளிபரப்பு செய்தார்.

"சீன அரசாங்கம் இலங்கைக்கு கடந்த பல தசாப்தங்களாக சமூக, பொருளாதார, அபிவிருத்திக்காக பாரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த விஜயமானது எமது இரு நாடுகளுக்கும், மக்களுக்கும் இடையிலான நெருக்கமாக உறவிற்கு வலு சேர்க்கும் என நான் நம்புகின்றேன்" என அநுர குமார திஸாநாயக்க, சீன அதிபருடனான சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

இந்த காணொளிகளை ஒளிபரப்பு செய்ததைத் தொடர்ந்து ஹர்ஷன ராஜகருணா ஊடகங்களிடம் பேசுகையில் பல கேள்விகளை எழுப்பினார்.



"ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவா இவ்வாறு கதைக்கின்றார்? அவர் ஏற்கனவே கூறிய விடயங்கள் அவருக்கு தற்போது நினைவில் இல்லை. ஒரே நபருக்கு பல அவதாரங்கள் இருக்கும் நிலையும் காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்திலா இவர் இருக்கின்றார்?" எனக் கூறினார்.

மேலும், "இந்த நாட்டை சீன காலனியாக மாற்றுகின்றார்கள் என அநுர கூறினார். அப்படியென்றால், இந்த பயணத்தின்போது சீன காலனியிலிருந்து விடுபடுவது தொடர்பில் பேசினாரா? இந்த நாட்டு அரசியல்வாதிகளை சீன வாங்கியுள்ளதாக அவர் கூறினார். அவ்வாறு சீனா வாங்கிய அரசியல்வாதிகள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்" என்று வலியுறுத்தினார் ராஜகருணா.

தொடர்ந்து பேசிய அவர், "இலங்கையை சீனா கடன் பொறிக்குள் சிக்க வைத்துள்ளதாக அநுர கூறியிருந்தார். கடன் பொறியில் சிக்க வைத்த சீன அரசாங்கத்துடன் கலந்துரையாடி கடனை இல்லாது செய்யும் பேச்சு வார்த்தைகளில் அவர் ஈடுபடவில்லை."

"சீனாவிற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விஜயம் செய்தமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். எனினும், அவர் கூறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சீனாவுடன் கலந்துரையாடல்களை நடத்தினாரா என்பதை வெளிப்படுத்த வேண்டும்" என தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் "ஒரே சீன கொள்கையை" தொடர்ச்சியாக கடைபிடிக்கவுள்ளதாக கடந்த 6-ஆம் தேதி அமைச்சரவை கூட்டத்தின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அர சாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக் கப்பட்டிருந்தது.

"இலங்கை அரசாங்கம் "ஒரே சீன கொள்கையை" தொடர்ச்சியாக கடைப்பிடித்து வந்துள்ளதுடன், அதன்மூலம் சட்டரீதியான சீனாவாக, சீனக் குடியரசை மாத்திரம் மக்கள் ஏற்றுக் கொள்வதுடன் தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக் கொள்வதெனும் நிலைப்பாடாகும்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன விஜயம், சீனாவுடனான ராஜதந்திர உறவுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் நாட்களில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெளிவுட்டல் வழங்குவார் என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளையும் சமாளித்தபடி அணிசேரா கொள்கை அடிப்படையிலேயே முன்னோக்கி செல்வதற்கு அநுர அரசாங்கம் முற்படுகின்றது என மூத்த பத்திரிகை யாளர் ஆர்.சனத் தெரிவிக்கின்றார்.

"தாய்வானை சீனா தனது மாகாண மாகவே கருதுகின்றது. எனினும், தாய் வான் தம்மை தனி நாடாக கருதி வரு கின்றது. இதற்கு சில மேற்குலக நாடு கள் முழு ஆதரவை தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் தனது அரசாங்கம் ஒரே சீனா கொள்கையை ஏற்கின்றது என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது" என்று கூறினார்.

"சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பிக்கு (மக்கள் விடுதலை முன்னணி) நெடுநாள் தொடர்பு இருக்கின்றது. முன்பு இருந்தே "ஒரே சீனா கொள்கையே" ஏற்கப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே இதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய, சீன எல்லைப் பிரச்னை தொடர்பில் கொழும்பு தரப்பில் ஏதேனும் அறிவிக்கப்பட்டி ருந்தால் அது டெல்லியுடனான உறவில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக் கும். எனவே, இந்த ஒரே சீனா கொள்கையென்பது இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தாது." என்று குறிப்பிடுகிறார் ஆர்.சனத்.

"சீனா மற்றும் இந்தியாவுடனான இராஜதந்திர தொடர்பை மிகவும் நுட்பமாக அரசாங்கம் கையாள வேண்டும், அவ்வாறு இல்லையேல் இராஜதந்திர மட்டத்திலான "தலையிடிகள்" ஏற்படக் கூடும்" என்று, மூத்த பத்திரிகையாளர் ஆர்.சனத் தெரிவித்தார்.

அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் சீன ஆதரவு கொள்கையை கொண்டிருப்பதில் எந்தவித ஆச்சரியமும் கிடையாது என சர்வதேச விவகாரங்களின் நிபுணரும், சென்னை லயோலா கல்லூரியின் சமூக பணித்துறை பேராசிரியருமான கிளாட்சன் சேவியர் குறிப்பிட்டார்.

"சீனாவை எதிர்க்கக்கூடிய நாடுகள் மிக குறைவாகதான் இருக்கின்றன. ராஜபக்ஸவின் காலக் கட்டத்தில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலோங்கி இருந்ததைப் பார்த்தோம். ஹம்பாந்தோட்டை துறைமுகமாக இருந்தாலும் சரி, ரயில்வே தண்டவாளமாக இருந்தாலும் சரி, மிக பெரிய உட்கட்டமைப்பாக இருந்தாலும் சரி எல்லாவற்றிற்கும் சீனாவிற்கு புகலிடம் கொடுத்து வந்தார்கள்." என்று அவர் கூறுகிறார்.

அதேசமயம், இந்தியாவை விட அதிகமான உறவு அப்படியென்று சொல்ல முடியாது என்று குறிப்பிடும் அவர், இந்தியர்கள் உறவுகாரர்கள், சீனர்கள் நண்பர்கள் என இலங்கையில் சொல்வார்கள் என்கிறார்.

"சீனாவை பொருத்தவரையும் கேள்விகளைக் கேட்காமல் பணம் கொடுப்பது என்பது வழக்கமானது. இங்கே மட்டும் அல்ல. வேறு நாடுகளிலும் செய்துக் கொண்டிருக்கின்றார்கள். இடதுசாரி கொள்கைகளை கொண்ட ஜே.வி.பி அரசாங்கத்திலுள்ள அநுர குமார திஸாநாயக்க, சீனாவிற்கு நெருக்கமாக இருப்பதில் எந்தவித ஆச்சரியமும் கிடையாது." என்கிறார் கிளாட்சன் சேவியர்.

தொடர்ந்து பேசிய கிளாட்சன், "அதேநேரம், முழுமையாக சீனாவை ஆதரிப்பார்கள் என்பதும் தவறான விடயம். சீனாவிற்கான கொள்கையை வகுத்திருக்கலாமே தவிர, சீனாவை



முதன்மைப்படுத்துவது என்பது இலங்கைக்கு முரணான விடயமாக கொண்டு சென்று விட்டு விடும்."

"சீனர்கள் எங்கெல்லாம் அதிகமான முதலீடுகளை செய்துள்ளார்களோ, அங்கேல்லாம் அவர்களின் ஆதிக்கம் எப்படி இருக்கின்றது என்பதை காண்கின்றோம். ஆப்பிரிக்க நாடுகளாக இருந்தாலும் சரி, மற்ற நாடுகளாக இருந்தாலும் சரி சீனா அதிக்கத்தை செலுத்த நினைக்கின்றது" என்கிறார்.

அதேசமயம், சீனாவை புறக்கணித்து விட முடியாது. ஏனென்றால், அங்கு தான் தேவையான செல்வங்கள் இருக்கின்றன, வளங்கள் இருக்கின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"முதல் சுற்று பேச்சுவார்த்தைக்கு இப்போது தான் சென்றிருக்கின்றார்கள். சீனா உதவி செய்கின்றேன் என்று சொல்லியுள்ளது. எந்தளவிற்கு உதவிகள் வரும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சீனாவை இலங்கை ஆதரித்த போதிலும், சீனா மாத்திரம் கொண்ட எல்லா கொள்கைகளை வகுத்துக்கொள்ளவில்லை."


"கடந்த 20 வருட காலமாக இது நடந்துக்கொண்டுள்ளது. புதிய விடயம் அல்ல. ஆனால், சற்று நெருக்கமானவர்களாக காட்சியளிக்கின்றார்களே தவிர பெரியளவிலான வித்தியாசம் இல்லை" என்று கூறுகிறார் பேராசிரியர் கிளாட்சன் சேவியர். (பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக்கட்சிகளை ஒன்றுபடுத்தலும் தமிழ் மக்களைத் தேசமாக ஒன்று திரட்டுதலும்

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியம் பேசும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பெற்றுக் கொண்ட படிப்பினை மீண்டும் அவர்களை ஒருபுள்ளியில் ஒன்றிணையவேண்டிய அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தியுள்ளதைக் காணமுடிகின்றது. தேர்தலின் பின் அவ்வாறான ஓர் எண்ணம் அக்கட்சித்தலைவர்கள் எல்லோரிடத்தும் வலுவடைந்திருந்தவேளையில் அதனைச் செயலுருவாக்கும் நடவடிக்கையை கஜேந்திரகுமார் தொடக்கிவைத்தார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கப் போவதாக கூறிவரும் புதிய அரசியலைப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகத் தமிழ் மக்கள் பேரவையினால் வரையப்பட்ட முன்மொழிவை தமிழ்த்தரப்பின் ஒன்றுபட்ட கோரிக்கையாக வலியுறுத்துவதற்கான ஏற்பாடே அதுவென அவரால் கூறப்படுகிறது. அதன்வழி பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் போன்றோருடன் இருசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதுடன் மீண்டும் இம்மாதம் 25 ஆம் திகதி பரந்த அடிப்படையில் அக்கட்சிகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் கடந்த18ஆம் திகதியில் கூடிய தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு சிறிதரனின் முயற்சியைப் புறந்தள்ளி வேறுமுடிவொன்றை எடுத்தது. கட்சியின் தற்போதைய பதில்தலைவர் சிவஞானம் தலைமையில் சிறிதரனையும் உள்ளடக்கி ஏழுபேர் கொண்ட குழு ஒன்றை அமைத்ததுடன் அக்குழுவே அரசியல் தீர்வு தொடர்பாக ஆராயுமென்றும் அதன்பின்னர் தேவையெனில் ஏனைய கட்சிகளுடன் அதுதொடர்பாகக் கலந்துரையாடும் என்றும் மத்திய குழுவால் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் கஜேந்திரகுமாரின் முயற்சிக்கு



முட்டுக்கட்டை இடப்பட்டதுடன் சிறிதரனும் அதிலிருந்து ஓரங்கட்டப்பட்டதைக் காணமுடியும். இந்நிலையில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒன்றுபடுவதற்கான சாத்தியமுண்டா? அவ்வாறு கட்சிகள் ஒன்படுவதன்மூலம் தமிழ் மக்களைத் தேசமாக ஒன்றிணைக்க முடியுமா? இல்லையெனில் அதற்கான வேறு தெரிவுகள் எவை? போன்ற கேள்விகளுக்கு விடைதேடுவது அவசியமாகிறது.

கட்சித்தலைவர்களின் ஒன்றிணைவு எவ்வளவு சாத்தியமானது என்பது அதற்கான தற்போதைய தடைகளை அகற்றுவதில் தங்கியுள்ளது. கட்சிகள் தற்போது எவற்றிற்கு முன்னுரிமை வழங்குகின்றன என்பதிலிருந்து இதற்கான தடை எங்குள்ளது என அறியமுடியும். மக்கள் நலனுக்கு முன்னுரிமையளிப்பதைவிடத் தமது கட்சிசார் நலனுக்கு முன்னுரிமையளிப்பதில் எல்லாக்கட்சித் தலைவர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். தலைவர்களின் இந்த எதிர்மறையான ஒற்றுமையே தேவைப்படும் நேர்மறை ஒற்றுமைக்குத் தடையாக இருக்கும் அடிப்படைக் காரணி. ஏன் கட்சி சார்ந்து அவர்கள் சிந்திக்கிறார்கள்? அவர்களின் தன்னலத்தேவைகள்தான் அதற்கான பிரதான காரணம். தத்தமது கட்சிகளை வலுப்படுத்தல், அதன்மூலம் அரசியல் பதவிகளை அதிகரித்தல், அதன்மூலம் கட்புலனாகும் கட்புலனாகாத நன்மைகளைப் பெறுதல் என்பவற்றிற்கே அவர்களால் கூடிய முக்கியத்தவம் அளிக்கப்படுகிறது. இதற்கான மிகப் பிந்திய உதாரணந்தான் கஜேந்திரகுமாரின் முன்னெடுப்புக்கான தமிழரசுக்கட்சியின் முட்டுக்கட்டை.

இந்நோக்கத்துக்காக மக்களிடையே



வேற்றுமையும் போட்டியும் கட்டி வளர்க்கப்படுகிறது. தாங்களும் தங்கள் அணுகுமுறைகளுமே சரியானது என மக்களிடையே ஒவ்வொரு கட்சியும் வளர்க்க முயற்சிக்கின்றது. மற்றக்கட்சிகளும் தலைவர்களும் தவறானவர்களாகச் சித்தரிக்கப்படுகிறது. விளைவு பொதுநோக்கத்தின்பால் மக்கள் ஒற்றுமையடைவதற்குப் பதிலாகத் தமக்கிடையே எதிர் எதிராகப் பிரிந்து நின்று சண்டைபோட வைக்கிறது. மக்கள் பலத்தை ஒன்று திரட்டுவதற்குப் பதிலாக இவ்வாறான சில்லறை விடயங்களில் அது வீணடிக்கப்படுகிறது. தென்னிலங்கை தமது நலனுக்காக இனவாதத்தை எவ்வாறு வளர்க்க விரும்புகிறதோ அதையொத்தவகையில் இங்கு கட்சிவாததைதை அதன் தலைவர்கள் வளர்க்க விரும்புகிறார்கள் என்பதே கசப்பான உண்மை. இவ்வாறான கட்சிகளுக்கிடையிலான போட்டியும் பிரிவினைகளும் பரிணாமமடைந்து இப்போது ஒவ்வொரு கட்சிக்குள்ளேயே அது தனிநபர் சார்ந்து வளரத் தொடங்கி விட்டது. முன்னர் கட்சிகளை நோக்கி எறியப்பட்ட துரோகிகள் வார்த்தை இப்போது கட்சிக்குள்ளேயே தாராளமாகப் புழங்குகிறது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் கட்சிகள் ஒன்றுபடுவதற்குப் பதிலாக மேலும் மேலும் சிதைவடைந்து வருவதையே நாம் காண்கிறோம். “ஆனந்தா என்கண்ணையே உன்னிடம் ஒப்படைக்கிறேன்” என்ற பாசமலர் படக்காட்சிக்கு ஒத்ததாக எதிரெதிராக மோதியவர்களையே ஒன்றுபடுத்தி வழங்கப்பட்ட அரசியல் இயக்கமான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பையே சின்னாபின்னாக்கியது மட்டுமன்றி அதில் தான்தான் பெரியவனென்று அடம்பிடித்து இந்த உடைவுகளுக்கெல்லாம் மூலகாரணமான



தமிழரசுக்கட்சியும் இன்று தனது உள்வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க நம்பிக்கையில்லை என்று அவர்களே கூறிய இலங்கை நீதிமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் தஞ்சமடைந்து நிற்பது பரிதாபத்துக்குரியது. இவ்வாறான ஒரு நிலையில் மிக அண்மிய வருக்காலத்தில் இக்கட்சிகள் ஒன்றுபடுவதற்கான வாய்ப்பு இல்லையெனத் துணிந்து கூறமுடியும்.


இத்தடைகள் எல்லாவற்றையும் தாண்டி கட்சித் தலைவர்கள் ஒன்றுமைப்படுகிறார்கள் என்று எடுத்துக் கொள்வோம். இந்த ஒற்றுமை எப்படியானதாக இருக்கும்? அறிக்கைகள், கோரிக்கைகள் என்பவற்றுக்கு தலைவர்கள் கையொப்பிடும் ஒன்றுமையா? அல்லது. தேர்தல்களில் வெல்வதற்கான ஒற்றுமையா? அல்லது ஒரே குடையின்கீழ் மக்களைத் தேசமாக ஒன்றுபடுத்தி ஜனநாயக வழியில் பலமான போராட்டங்களைச் செய்வதற்கான ஒற்றுமையா? கோரிக்கைகள், அறிக்கைகளின் கையொப்பத்துக்கான ஒன்றுபடலை ஏற்கனவே கண்டிருக்கிறோம். அதில்கூட இணைப்பதற்கு எத்தனை முயற்சிகள், எத்தனை தடைகள் காணப்பட்டன என்பதும் மக்கள் அறிந்ததே. அவ்வாறிருந்தும் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமையும் விருப்பமற்ற இருவரைத் திருமணத்தில் இணைத்தது போல்தான். தேர்தலுக்கான கூட்டு ஒற்றுமையா? அது தேர்தலின் பின் நிச்சயமாகப் பிரியும் என்றாலும் ஆசனப் பங்கீட்டின்போதும் பிரிய இடமுண்டு. அதுமட்டுமன்றி தேர்தல் பரப்புரைகளின்போது தத்தமது வெற்றிக்காக மறைமுகமான பிளவுகளை உருவாக்குவர். ஒற்றுமைக்குப் பதிலாக வெறுப்புகளே மக்களிடத்தில் விதைக்கப்படும்.

இவை எல்லாவற்றையும் கடந்து கட்சிகளின் எல்லைக்கப்பால் பொதுக் கட்டமைப்பு,பொதுக்கொள்கை மற்றும் அதனை அடைவதற்கான வழிமுறைகள் என்பவற்றில் ஆத்மார்த்தமான இணக்கப்பாடு ஒன்று எட்டப்படுவதே உண்மையான ஒன்றுபடலாக அமையும். ஆனால்

> தற்போதைய அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தவும் பொருத்தமான பாதையில் வழிப்படுத்தவும் பொதுமக்கள்சார் கட்டமைப்பு ஒன்றே அவசியதேவையாகும். சமூகமட்டத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் உள்ளடக்கியதான பொதுக்கட்டமைப்பு ஒன்று விரைந்து ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

அது சாத்தியப்படப்போவதில்லை. ஏனெனில் இப்போதிருக்கும் கட்சித் தலைவர்களும் அதற்குத் தயாரில்லை. அவர்கள் தயார் என்றாலும் மக்கள் அவர்களை நம்புவார்களா என்பது ஐயம். அதன்விளைவை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கண்டபின்பும் இவ்வாறு ஐயப்படாது இருக்க முடியாது. அவ்வாறாயின் மக்களைத் தேசமாக ஒன்றுபடுத்த வேறு தெரிவுகள் இல்லையா?

இதற்கான விடையைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்திலிருந்தும் அதன் நடைமுறைகளிலிருந்தும் பெறமுடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்திலும் அதற்கேற்றவாறான அரசியல் செயற்பாடுகளில் கவனஞ் செலுத்தினார்களே




**கந்தையா அருந்தவபாலன்**

யன்றி சமகாலத்தில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் நடைமுறையிலிருந்த தேர்தல் ஜனநாயக வழிகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. எனினும் சமாந்தரமாக அதன்தேவையை உணர்ந்து போராளிக் கட்சிகளையும் இணைத்து உருவாக்



கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பின்னர் விடுதலைப்புலிகள் எவ்வாறு ஒரு அரசியல் இயக்கமாக வளர்த்து தமது போராட்டத்துக்கு ஜனநாயகப் பலத்தை உருவாக்கினார்கள் என்பது அறிந்த விடயம். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடும் நெறிப்படுத்தலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு அடிப்படை. அவ்வுண்மையை அவர்கள் இல்லாத போது அது எவ்வாறு சிதைந்தது என்பது நிரூபிக்கின்றது. அப்பட்டறிவின் அடிப்படையில் தற்போதைய அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தவும் பொருத்தமான பாதையில் வழிப்படுத்தவும் பொதுமக்கள்சார் கட்டமைப்பு ஒன்றே அவசியதேவையாகும். சமூக மட்டத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் உள்ளடக்கியதான பொதுக்கட்டமைப்பு ஒன்று விரைந்து ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வாறான கட்டமைப்பொன்றை உருவாக்கும்போது தமிழ் மக்கள்



பேரவை, தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு போன்றவற்றின் தோல்விக்கான காரணங்களைக் கண்டறியவேண்டும். அக்கட்டமைப்புகளின் பலம் பலவீனங்கள் இனங்காணவேண்டும். இன்றைய பலவீனமான அரசியல்களத்தையும் தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் கவனத்திற்கொண்டு இவ்விடயத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அரசியல் கட்சிகளின் இன்றைய தலைவர்கள் தங்கள் தேர்தல் அவாவைத் துறந்து இளைஞர்களுக்கு வழிவிட்டு இக்கட்டமைப்பினை பலப்படுத்தும், வழிப்படுத்தும் தூண்களாக மாறவேண்டும். அப்போதுதான் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். மக்களின் நம்பிக்கையை பெறும் தலைவர்களால் அல்லது அமைப்பால் மக்களைத் தேசமாகத் திரட்டுவது கடினமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்
சித்தன்கேணி.**

**கேள்வி:** மூன்றாவது முறையாக யாழ்ப்பாணம் கலாச்சார நிலையத்திற்கு பெயர் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கேள்வியை எழுதி அனுப்பும்போது அதற்கு கடைசியாக வைக்கப்பட்ட பெயர் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மையம். அந்தப் பெயரைப் பாத்த




தும் எனக்கு நடிகர் கமல்ஹாசன் அரசியல் கட்சியைத் தொடங்கியதுதான் ஞாபகத்திற்கு வந்தது. மக்கள் நீதி மையம் என்பதுதான் அவரது கட்சியின் பெயர். அந்தப் பெயரையும் இந்தப் பெயரையும் பொருத்திப் பாத்த போது ஒன்றும் புரியவில்லை. உங்களுக்காவது ஏதேனும் புரிந்ததா?

**வியுக்தியார்:** யாழ்ப்பாணத்தின் மிக உயரமான அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக அது திறக்கப்பட்டபோது அதன் பெயர் யாழ்ப்பாண கலாசார நிலையம். அதற்குப் பிறகு ரணில் காலத்தில் மீண்டும் திறக்கப்பட்டபோது அதன்பெயர் யாழ்ப்பாண பண்பாட்டு நிலையம் என்று மாற்றப்பட்டது. கலாசாரம் எதற்காக பண்பாடு என்று பெயர் மாறியது என்பது தெரியவில்லை. இப்போது அதன் பெயர் நீங்கள் குறிப்பிட்டதுபோல திருவள்ளுவர் பண்பாட்டு மையம். யாழ்ப்பாண பண்பாடு என்பது அங்கு பழக்கத்தில் உள்ள பண்பாடுகளை குறிப்பதுதான். நமது வழக்கத்தில் மையம் என்பது ஒரு இறந்தவரின் சடலங்களைக் குறிப்பது என்பது நமக்கு தெரிந்ததுதான். யாழ்ப்பாண பேச்சுவழக்கில் சடலங்களையே மையம் என்பார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு நிலையத்திற்கு மையம் என்று பெயர் வைத்ததுதான் எதற்காக என்பது புரியவில்லை.

---

**எம். கௌதம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தற்போதைய சூழலில் வடக்கு மாகாணத்தை நோக்கி பல்வேறு புலம்பெயர் முதலீட்டாளர்கள் வருகின்றனர். அவர்களை வரவேற்பதுடன் இன்னமும் அதிகமான முதலீடுகள் எமது மாகாணத்தை நோக்கி



வரவேண்டும். இதன் ஊடாக எமது பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப்பெற வேண்டும் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** மனுசன் இந்த மாகாணத்திற்கு எதையாவது தனது காலத்தில் செய்துவிடவேண்டும் என்று ஆசைப்படுகின்றார் என்பது தெரிகின்றது. அவர் சொல்வதுபோல புலம்பெயர்ந்த முதலீட்டாளர்கள் வருகிறார்களா என்பது தெரியவில்லை. இப்படிச் சொல்வதன் மூலமாவது பலரையும் முதலிடவைக்கலாம் என்று நினைக்கிறாரோ தெரியவில்லை. ஆனால், இந்த முதலீடுகளால் நமது பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற அவரது நம்பிக்கைதான் புரியவில்லை. நம்மவர்கள் செய்தால் - 'ஆடுமேய்த்தாலும் கவுணமேந்திலை தான் மேய்க்க வேணும்" என்றுதானே இப்போதும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதாவது சும்மா இருந்து சம்பளம் எடுக்கலாம் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை. முதலில் இந்த மனநிலையை மாற்றுவதற்கு ஆளுனர் ஐயா நடவடிக்கை- அல்லது முயற்சியை எடுக்கவேண்டும். அப்போதுதான் புலம்பெயர் முதலீட்டாளர்கள் வந்தாலும் அவர்களின் முதலீடுகளில் வேலைசெய்ய நம்மவர்கள் முன்வருவார்கள். வேலைக்கு ஆட்கள் இருந்தால்தானே முதலிடமுடியும்.

**கந்தையா முகுந்தன்
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தமிழ்த் தேசியப்பிரச்னை தொடர்பான அவர்களின் கடந்த கால நிலைப்பாடுகள் காரணமாக, எனக்கு அவர்களுடன் அதிக உடன்பாடு இல்லை. இனப்பிரச்னை தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜே.வி. பி. இன்னும் தெளிவாக்கவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** ஜேவிபியின் கடந்தகால நிலைப்பாடுகள்தான் அவருக்கு தெரிந்திருக்கின்றதே. அதனால் தானே அவர்களோடு அவருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கிறதாம். அவர்கள் நிலைப்பாடு இருக்கட்டும், முதலில் நாம் அல்லவா நமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க வேண்டும். அதற்குத்தான் அவர் இப்போது முயன்று கொண்டிருக்கிறார் என்று நினைக் கின்றேன். தமிழ் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று ஒரு சந்திப்பு நடக்க விருப்பதாக அறிவித்திருந்தார்கள். பின்னர் அது நாளை 27ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றதாம். அதி லும் சிறிதரன் எம்.பியோ தமிழ் அரசு எம்.பி.க்களோ கலந்துகொள்ளப்போவதில்லை. தமிழ் அரசு மத்திய செயற்குழுதான் அவருக்கு பூட்டுப்போட்டு விட்டதே. இனி செல்வம் அடைக்கலநாதனுடன் மட்டும்பேசு வாரோ தெரியவில்லை. நமது நிலைப்பாட்டை முன் வைத்துவிட்டு அதுபற்றி அரசின் நிலைப்பாட்டை கேட்பதுதான் சரியானது.

---

**எஸ். செந்துஜன்,
ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண கலாசார மையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாச்சார மையம் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று சீ.வீ.கே சிவஞானம் ஐயாவிலிருந்து டக்ளஸ் தேவானந்தா வரை பலரும் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு பலரும் கண்டனம் தெரிவித்த பின்னர், இப்போது திருவள்ளுவர் கலாச்சார மையம் என்பது யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையம் என்ற பெயர்ப்பலகை அவசரம் அவசரமாக கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளதாமே?.

**வியுக்தியார்:** பெயர்மாற்றம் செய்யப்பட்டதும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிஜி கூட அதனை வரவேற்று தனது எக்ஸ் தளத்தில் எழுதியதிலிருந்து இந்த பெயர்மாற்றத்தின் பின்னணியை நாம் புரிந்துகொள்ளலாம். யாழ்பாணத்திற்கு இதுபோன்ற ஒரு மண்டபம் தேவை என்பதும் அதனை கட்டித்தர இந்தியா முன்வந்த




தும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியதுதான். ஆனால், அதன் பெயரை யாருக்கும் தெரியாமல் திடீர் திடீர் என்று நினைத்த மாத்திரத்தில் மாற்றுவதும், அதனை 'யாரிடமும் நாங்கள் எதற்காக கேட்கவோ அல்லது ஆலோசனை செய்யவோ வேண்டும்?" என்று இந்த மாற்றங்களை செய்பவர்கள் நினைப்பதையும்தான் ஜீரணிக்கமுடியவில்லை.

இப்போது வைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையம்' என்று இருப்பதும், நகைப்புக்குரியதாகவே தெரிகின்றது. திருவள்ளுவர் கலாசார மையம், யாழ்ப்பாணம் என்று முகவரியை எழுதும்போது, பின்னால் அல்லது கீழே இருக்கவேண்டிய யாழ்ப்பாணத்தை முன்னால் மாறிப்போட்டுவிட்டார்களோ தெரியவில்லை.

---

**சபா. சிவநாதன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**


கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, எதிர்வரும் தேர்தல்களில் இரு கட்சிகளும் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல்களைத் தொடங்க ஒப்புதல் அளித்துள்ளதாமே. இது சாத்தியமாகும் என்று நினைக்கின்றீர்களா? ஜனாதிபதி தேர்தலின்போதும் இப்படித்தான் அடிக்கடி செய்திகள் வந்தனவே?

வியுக்தியார்: அப்போது இரண்டு கட்சிகளின் தலைவர்களுமே விடாப்பிடியாக தான்தான் ஜனாதிபதி ஆகவேண்டும் என்பதில் விட்டுக்கொடுப்புக்கு தயாராக இல்லாததால், அப்போது இணைந்து தேர்தலைச் சந்திப்பது சாத்தியமாகவில்லை. ஆனால் இப்போது நிலமை அப்படி இல்லையே. இப்போது அவமானகரமாக தோல்விகண்ட பின்னரும் அந்தக் கட்சியின் தலைவர்கள் இருவரும், தத்தம் கட்சிகளின் தலைவர்களாகவே இருக்கவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள் போல் தெரிகின்றது. அதுதான் தேர்தலில் இணைந்து செயல்படுவது பற்றி மட்டும் பேசப்போகிறார்களாம். இதிலிருந்து ஒன்று தெளிவாக புரிகின்றது. நமது தமிழ் தலைவர்கள் போல அவர்களும் தத்தம் நலனில் மாத்திரம்தான் குறியாக இருக்கின்றார்கள் என்று. என்ன ஒரு வித்தியாசம், நம்மவர்கள் ஒரு கட்சிக்குள் இருந்து கொண்டே இரண்டுபட்டு நிற்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருகட்சியிலிருந்து பிரிந்து, இரண்டு கட்சிகளாக இரண்டுபட்டு நிற்கிறார்கள்.

---

**இரா. ஜெயரூபன்,
பூந்தோட்டம், வவுனியா.**

கேள்வி: முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப் ட்ட அனைத்து உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் அரசாங்கம் மீளப் பெற்றுக்கொள்ளும் என்று ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அறிவித்துள் ளாரே. அதற்கு மகிந்த ராஜபக்சவும், தனக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் கிடைத்தால் வீட்டைக்காலிசெய்ய தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். கடிதம் போட்டு வீட்டைக்காலி செய்ய வைப்பார்கள் என்று நீனைக்கிறீர்களா?



**வியுக்தியார்:** அரசாங்கம் எப்படியெல்லாம் செலவுகளை குறைக்க வேண்டும் என்று நினைக்கின்றதோ அதையெல்லாம் செய்து செலவைக் குறைப்பது நல்லது தான். ஆனால் அதைவிட முக்கியமானது ராஜபக்சக்கள் நாட்டில் கொள்ளையடுத்து கொண்டு போய் வெளி ாடுகளில் வைத்திருப்பதாக தேசிய மக்கள் சக்தி எதிர்க் கட்சியாக இருந்தபோது சொல்லிக்கொண்டிருந்ததே. அதனை நாட்டுக்குள் கொண்டு வருகின்ற வேலைக்கு அல்லவா அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். தேர்தல் காலத்தில் ஒரு நாள் ரயிலில் போய்க்கொண்டி ருந்தபோது அருகே இருந்து பயணித்த ஒரு சிங்கள பயணியிடம் கேட்டேன். நீங்கள் யாருக்கு வாக்களிக்க போகிறீர்கள் என்று. அதற்கு அவர் தயங்காமல் சொன் னார் 'ஏகேடி'க்குதான் என்று, நான் எனது பத்திரி கைக்கார கேள்வியை அவரிடம் கேட்டேன். 'அவர் ஆட்சிக்கு வந்தால் மட்டும் நமது நாட்டுக்கு டொலர் கையிருப்பு வந்துவிடுமா?" என்று. அவர் தயக்கமின்றி சொன்னார்: 'அவர் வந்தால், மகிந்த கொண்டுபோய் ஒளிச்சுவைச்சிருக்கிற காசை எல்லாம் கொண்டுவந்த விடுவார். நமது நாட்டுக்கு பிறகு எந்தப் பிரச்சினையும் இருக்காதுதானே?" என்று. அவரைப் போன்றவர்களின் நம்பிக்கைக்காக என்றாலும் முதலில் மகிந்தவின் சொத்துக்களை அல்லவா கொண்டு வர வேண்டும். அத னைச் செய்யாமல் இப்படி வீட்டிலிருந்து எழுப்பினால், அவர் மீண்டும் அனுதாப அலையை எற்படுத்தி மீண்டெழுந்து விடுவாரோ என்ற பயம்தான் எனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்ரான்லி ஜொனி

# தாக்குப்பிடிக்குமா காசா போர்நிறுத்தம்?

2023 அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 1200 பேர் பலியாகினர். அதைத் தொடர்ந்த மூண்ட போர் 15 மாதங்களாக நீடித்த பிறகு இஸ்ரேலும் ஹமாஸூம் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. கடந்த சனிக்கிழமை (18.01) இஸ்ரேலிய அமைச்சரவை போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அங்கீகாரம் அளித்தது. அந்த உடன்படிக்கை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு காணப்பட்ட உடன்படிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை (19.01) நடைமுறைக்கு வந்திருக்கிறது. அது நீடித்து நிலைக்குமானால் மத்திய தரைக்கடல் ஓரமாக அமைந்திருக்கும் காசா பள்ளத்தாக்கு ஏங்கிக்கொண்டிருந்த நிம்மதி கிடைக்கக்கூடியதாக இருக்கும். கடந்த 15 மாதங்களுக்கும் அதிகமான காலமாக இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் காசா மீது இடையறாது நடத்திய குண்டு வீச்சுக்களில் 46 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் பெரும்பாலும் அந்த பள்ளத்தாக்கின் சனத்தொகை இடம்பெயர்ந்தது.

போர்நிறுத்த உடன்படிக்கை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. முதற்கட்டத்தின் 42 நாட்களில் ஹமாஸ் 33 பணயக்கைதிகளை விடுதலை செய்யும். இஸ்ரேல் சுமார் ஆயிரம் பாலஸ்தீனக் கைதிகளை விடுவிக்கும். காசாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் ஓரளவு வாபஸ்பெறுவதுடன் தினமும் மனிதாபிமான உதவிகளுடன் பள்ளத்தாக்கிற்கு சுமார் 600 லொறிகள் வருவதற்கு அனுமதிக்கப்படும்.

போர் தொடங்கிய நாள் முதல் இஸ்ரேலின் படுமோசமான குண்டு வீச்சுக்களுக்கு இலக்கான வடக்கு காசாவையும் பள்ளத்தாக்கின் சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்து முடங்கிப்போயிருக்கும் தெற்கு காசாவையும் பிரிக்கும் நெற்சாரிம் பாதையில் இருந்து இஸ்ரேலியப் பாதுகாப்பு படைகள் வாபஸ்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நெற்சாறிமில் இருந்து இஸ்ரேலிய துருப்புக்கள் விலகினால், இடம்பெயர்ந்த காசா மக்களில் சிலர் பள்ளத்தாக்கின் மத்திய மற்றும் தெற்கு பகுதியில் இருந்து வடக்கிற்கு வரக்கூடியதாக இருக்கும்.

ஆனால், முதற்கட்டத்தில், ராபா எல்லையில் பிலடெல்பி பாதையில் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும். எகிப்துடனான காசாவின் எல்லையை இஸ்ரேல் தொடர்ந்து கண்காணிக்கும் என்பதே இதன் அர்த்தமாகும். முதலாவது கட்டத்தின் 16 வது நாள் இரண்டாவது கட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தொடங்கும். திட்டத்தின் பிரகாரம் முதலாவது கட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால், அதற்கு பின்னரும் ஹமாஸின் காவலில் 65 பணயக்கைதிகள் தொடர்ந்து இருப்பர். அத்துடன் பிலடெல்பியிலும் காசாவின் சில இடைத்தாங்கல் பகுதிகளிலும் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும்.

இரண்டாவது கட்டத்தில் உயிருடன் இருக்கும் எஞ்சிய பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று ஹமாஸிடம் கேட்கப்படும். இரு தரப்பினரும் மோதல்களுக்கு நிரந்தர முடிவு கட்ட வேண்டும். அதற்கு பின்னரான நடவடிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் மூன்றாம் கட்டத்தில் அடங்கும்.



> போரை முடிவுக்கு கொண்டுவந்து காசாவில் இருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேல் இணங்குமேயானால், காசாவில் ஹமாஸ் ஒரு தீவிரவாத கிளர்ச்சிப்படையாக தொடர்ந்தும் இருக்கும். இஸ்ரேல் காசாவில் தொடர்ந்து நிலை கொண்டிருக்குமானால், நிலைபேறான போர்நிறுத்த உடன்படிக்கை சாத்தியமில்லை. முழுமையான அழிப்புப் போரே தொடரும்.

**ஏன் தற்போது இருதரப்பினரும் போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டனர்?**

இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை எட்டு மாதங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட திட்டத்தில் இருந்து வேறுபட்டதாகும். போருக்கு நிரந்தரமான முடிவு ஒன்று கொண்டுவரப்படுமாக இருந்தால் ஒரு உடன்படிக்கைக்கு இணங்கத் தயாராக இருப்பதாக ஹமாஸ் முன்னர் அறிவித்தது

மே மாதம் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு இஸ்ரேல் அதன் இலக்குகள் நிறைவுசெய்யப்படும் வரை இராணுவ நடவடிக்கைகளை தொடரும் என்று கூறி உடன்படிக்கையை நிராகரித்தார். ஆனால், அதற்கு பின்னரான காலப்பகுதியில் பிராந்தியத்தில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

பிராந்தியத்தில் தனது நிலை முன்னரை விடவும் தற்போது வலுவானதாக இருக்கிறது என்று இஸ்ரேல் நம்புகிறது. லெபனானிய திரட்டல் படை அமைப்பான ஹெஸ்புல்லா இஸ்ரேலின் தாக்குதல்களில் அதன் உயர்மட்ட தலைவர்களில் பெரும்பாலானவர்களை இழந்துவிட்டது. யஹ்யா சின்வார் உட்பட ஹமாஸ் இயக்கத்தின் பெரும்பாலான தலைவர்களும் இஸ்ரேலிய பாதுகாப்பு படைகளினால் கொல்லப்பட்டுவிட்டனர். கடந்த அக்டோபரில் ஈரானிய இஸ்லாமிய குடியரசின் ஆகாயப் பாதுகாப்பு மற்றும் இராணுவ இலக்குவைத்து பாரிய ஆகாயமார்க்கத் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியது. (அதற்கு பதில் தாக்குதல்களை ஈரான் இன்னமும் நடத்தவில்லை)

சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி மேற்காசியாவில் ஈரானின் எதிர்த்தாக்குதல் கூட்டணியை மேலும் பலவீனப்படுத்திவிட்டது. அசாத்தின் சிரியா ஈரானுக்கும் ஹெஸ்புல்லாவுக்கும் இடையாலான ஒரு தரைப்பாலமாக அமைந்திருந்தது. அந்த பாலம் குழப்பப்பட்டதற்கு பின்னர் மீண்டும் ஆயுதங்களை பெற்றுக்கொள்வது ஹெஸ்புல்லாவுக்கு கஷ்டமானதாக இருக்கும். இந்த நிகழ்வுப்போக்குகள் எல்லாம் உள்நாட்டில் நெதான்யாகுவின் மதிப்பையும் வலுப்படுத்திவிட்டது.

இந்த காரணிகள் ஹமாஸூடனான ஒரு உடன்படிக்கை பற்றிய தனது நிலைப்பாட்டை மாற்றுவதற்கு நெதான்யாகுவுக்கு ஊக்கமளித்திருக்கக்கூடியது சாத்தியம். ஆனால், அத்துடன் எல்லாம் முடிந்துவிடவில்லை.

பலமாதகால சண்டைக்கு பிறகு காசாவில் அதன் இலக்குகளை அடைவதற்கு இஸ்ரேல் தவறிவிட்டது. ஹமாஸை இஸ்ரேல் இல்லாமல் செய்துவிடும் என்று போரை ஆரம்பித்தபோது நெதான்யாகு கூறினார். இஸ்ரேலிய தாக்குதல்கள் ஹமாஸின் இராணுவக் கட்டமைப்புக்களை தரம் குறைத்திருக்கிறது. ஆனால், ஹமாஸ் அதன் மூலமுதல் அவதாரமான கிளர்ச்சிப்படையாக தன்னை மீளுருவாக்கம் செய்திருக்கிறது. ஹமாஸ் போரில் இழந்த போராளிகளின் எண்ணிக்கையையும் விட கூடுதல் எண்ணிக்கையில் தனது அணிக்கு ஆட்களைத் திரட்டியிருக்கிறது என்பது அமெரிக்கவின் கணிப்பு என்று (முன்னாள்) அமெரிக்க இராஜாங்க அமைச்சர் அந்தனி பிளிங்கென் அண்மையில் கூறயிருந்தார்.

இராணுவ வழிமுறைகளின் ஊடாக இஸ்ரேலினால் அதன் இலக்குகளை அடையமுடியாமல் போனதையடுத்து மோதலை நிறுத்தி பணயக்கைதிகளை விடுவித்துக்கொள்ளும் நடைமுறைச் சாத்தியமான நிலைப்பாட்டை எடுப்பதற்கு இஸ்ரேலிய தலைவர்கள் நிர்ப்பநதிக்கப்பட்டிருக்கக்கூடும். பிறகு அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானதனால் நிலைமை மாற வேண்டியதாயிற்று.

பைடன் நிர்வாகம் நீண்ட நாட்களாகவே போர்நிறுத்தம் ஒன்றுக்கு வற்புறுத்திக்கொண்டிருந்தது. ஆனால், காசாவில் இஸ்ரேலின் போருக்கு அது முழுமையான ஆதரவையும் வழங்கிக் கொண்டிருந்தது. வாஷிங்டன் இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்ததுடன் சர்வதேச மன்றங்களில் இஸ்ரேலுக்கு ஆதரவையும் வழங்கியது. இஸ்ரேல் மீது ஒரு தீர்க்கமான நெருக்குதலை பிரயோகிக்கும் தந்திரோபாயத்தை பயன்படுத்துவதற்கு பைடன் மறுத்தார். போர்நிறுத்தம் ஒன்றுக்கு பகிரங்க அழைப்பை விடுத்து தனிப்பட்ட இராஜதந்திர முயற்சிகளையும் வாஷிங்டன் எடுத்தாலும் இஸ்ரேல் போரைத் தொடர்ந்ததையே காணக்கூடியதாக இருந்தது.

வெள்ளை மாளிகையில் இருந்து தான் வெளியேறுவதற்கு ஒருசில நாட்கள் முன்னதாக போர்நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்டதாக பைடன் இப்போது உரிமை கோரலாம். ஆனால், ட்ரம்ப் காரணியும் முக்கிய பாத்திரத்தை வகித்ததாக அரபு மற்றும் இஸ்ரேல் ஊடகங்கள் கூறுகின்றன. அமெரிக்காவின் 47 வது ஜனாதிபதியாக தான் ஜனவரி 20 பதவியேற்பதற்கு முன்னதாக இஸ்ரேலுக்கும் ஹமாஸூக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று காணப்படாவிட்டால் பெருநாசம் விழையும் என்று டொனால்ட் ட்ரம்ப் ஏற்கெனவே கூறியிருந்தார். ட்ரம்பின் மேற்காசிய தூதுவர் ஸ்றீவ் விற்கோவ் கடந்தவாரம் பேச்சுவார்த்தையாளர்களையும் இஸ்ரேலிய தலைவர்களையும் சந்தித்தார். ஜனாதிபதி பைடனினால் ஒரு முழு வருடமும் செய்ய முடியாமல் போனதை விற்கோவினால் ஒரேயொரு சந்திப்பின் மூலமாகச் சாதிக்கக் கூடியதாக இருந்ததாக அரபு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரைம்ஸ் ஒவ் இஸ்ரேல் செய்தி வெளியிட்டது.

ட்ரம்ப் இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாடுகளைக் கொண்டவர் என்பது நன்கு தெரிந்ததே. ஆனால், மீண்டும் வெள்ளை மாளிகைக்குள் பிரவேசித்தால் மேற்காசிய மற்றும் உக்ரெயின் போர்களை முடிவுக்கு கொண்டு வருவதாக தேர்தல் பிரசாரங்களில் அவர் உறுதியளித்தார். போர் முடிவொன்றுக்கு கொண்டுவரப்பட்டால், மனிதாபிமான கோணத்துக்கு புறம்பாக மேற்காசியாவில் ஓரளவு உறுதிப்பாடு ஏற்படவும் வழிபிறக்கும். பிராந்தியத்தில் என்றுமே முடிவடையாத இன்னொரு போருக்குள் அமெரிக்கா இழுத்து விடப்படுவதை ட்ரம்ப் விரும்பாமலும் இருக்கக்கூடும்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தப்படுமானால் இஸ்ரேலையும் செங்கடலின் ஊடாக செல்லும் கப்பல்களையும் தாக்குவதை யேமன் நாட்டின் ஹௌதி படைகள் நிறுத்தக்கூடும். ஹௌதிகளுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் அண்மைய மாதங்களில் விமானத் தாக்குதல்களை நடத்தியபோதிலும், அவர்களின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த முடியவில்லை.

செங்கடலில் அமைதி ஏற்படுமானால் சுயெஸ் கால்வாயின் ஊடாக வழமையான சரக்குக் கப்பல் போக்குவரத்தையும் மீண்டும் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும். அதன் விளைவாக உலக பொருளாதாரத்தின் மீதான பணவீக்க நெருக்குதலை தணிக்கக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய நிலையில் , போர் நிறுத்த உடன்படிக்கையின் முதலாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலேயே இஸ்ரேலும் ஹமாஸூம் கவனத்தைச் செலுத்தும். முதலாவது கட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான கணிசமான வாய்ப்பைக் கொண்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் கூடுதல் எண்ணிக்கையில் பாலஸ்தீன கைதிகள் - இஸ்ரேலிய பணயக்கைதிகள் பரிமாற்றம் இடம்பெறுவதை காண முடியும். ஆனால், மூன்றாவது கட்டமே உண்மையான சவாலாக இருக்கும்.

காசா பள்ளத்தாக்கில் இருந்து இஸ்ரேலியப் படைகள் முற்றாக விலக வேண்டும் என்று ஹமாஸ் கோரிக்கை விடுத்திருக்கிறது. ஹமாஸை இல்லாமல் செய்ய தன்னால் முடியாது என்பதையும் ஏதோ ஒரு வழியில் அந்த இயக்கம் தப்பிப்பிழைக்கும் என்பதையும் இஸ்ரேல் இஸ்ரேல் இப்போது விளங்கிக் கொள்கிறது. பெருமளவுக்கு நடைமுறைச் சாத்தியமான கோணத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் நண்பியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த தந்தை கைது

ஏறாவூர்,ஜன.26

மட்டக்களப்பு, ஏறாவூரில் மகளை தேடி வீட்டுக்கு வந்த நண்பியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட தந்தை பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் நன்னடத்தை இல்லம் ஒன்றின் பராமரிப்பில் வாழ்ந்து வரும் 10 வயது சிறுமியே இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசம் ஒன்றில் தாயும் தந்தையும் இந்த சிறுமியை விட்டுவிட்டு வெவ்வேறு திருமணங்கள் செய்து கொண்டுள்ள நிலையில், கைவிடப்பட்ட சிறுமி, சிறுவர் நன்னடத்தை இல்லம் ஒன்றின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், சம்பவதினத்தன்று இந்த சிறுமி மதியம் 02 மணியாகியும் மீண்டும் நன்னடத்தை இல்லத்துக்குத் திரும்பாததால் நன்னடத்தை இல்லத்தின் உத்தியோகத்தர்கள் சிலர் சிறுமியைத் தேடி பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, சிறுமி பாடசாலையில் இல்லை எனவும் அவர் தனது நண்பியின் வீட்டுக்குச் சென்றுள்ளதாகவும் நன்னடத்தை இல்லத்தின் உத்தியோகத்தர்களுக்கு தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நன்னடத்தை இல்லத்தின் உத்தியோகத்தர்கள் சிறுமியின் நண்பியின் வீட்டுக்குச் சென்று பார்த்த போது, சிறுமி தனது தாயாருடன் வெளியே சென்றுள்ளதாகவும் அந்தச் சிறுமியின் தந்தை தனது மகளை சந்திக்க வந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பின்னர், நன்னடத்தை இல்லத்தின் உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 37 வயதுடைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ)

# கட்டாருக்கான தூதுவராக பொறுப்பேற்ற முதல் பெண்

கொழும்பு, ஜன.26

கட்டாருக்கான இலங்கைத் தூதுவராக ரோஷன் சித்தாரா கான் அசாத் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கட்டார் நாட்டிற்கான இலங்கைத் தூதுவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் இவர் ஆவார்.

இலங்கையில் வெளியுறவு சேவை அதிகாரியாக 27 ஆண்டுகள் சேவை அனுபவத்தைக் கொண்ட சித்தாரா கான், 1998 ஆம் ஆண்டு வெளியுறவு சேவையில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.



வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு உட்பட பல்வேறு துறைகளில் உயர் பதவிகளை வகித்துள்ள அவர், லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனுக்கான மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். (எ)

# 4, 500 மெற்றிக் தொன் உப்பு நாளை இலங்கை வருகிறது

கொழும்பு, ஜன.26

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 4,500 மெற்றிக் தொன் உப்பு நாளை திங்கட்கிழமை நாட்டை வந்தடையும் என இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்திர பெர்னாண்டோ கூறுகையில்,

இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் 12,500 மெற்றிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், முதலாவது தொகுதி நாளை திங்கட்கிழமை நாட்டை வந்தடையும். நாட்டில் நிலவும் உப்பு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்தியாவிலுள்ள இரண்டு நிறுவனங்களுக்கு உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையால் உப்பை உற்பத்தி செய்வதில் பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து உப்பு இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# இரண்டு குழுக்கள் மோதல் 8 பேர் மருத்துவமனையில்

## வாழைச்சேனை பொலிஸார் விசாரணை

மட்டக்களப்பு,ஜன.26

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக இதுவரை எட்டுப் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செம்மண்ணோடைப் பகுதியில் இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இரு குழுக்களையும் சேர்ந்த எட்டுப்பேர் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அதில் நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களிலும் சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் இந்த தகராறு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

(எ)

# சர்வதேச உதவிகளை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை போன்ற நாடுகளுடனான அவற்றின் நடத்தைகள் மீதும் செல்வாக்கிற்கு உட்படுத்தக்கூடியதாகும்.

இவ்விரு நாடுகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டபோது ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க இந்த பிரச்சினையை அறிந்துகொண்டிருப்பார் என்று தெரிகிறது. இரு நாடுகளினதும் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக்கூடிய எந்த நடவடிக்கையிலும் இலங்கை ஈடுபடாது என்று தனது விஜயங்களின்போது அவர் உறுதியளித்திருக்கிறார்.

மூன்றாவது நாட்டுக்குள் வெளிநாட்டு அரசாங்கங்கள் ஊடுருவல்களைச் செய்யும்போது நிரந்தர நட்புறவை விடவும் நிரந்தர நலன்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன என்ற பாமேர்ஸ்ரன் பிரபுவின் கட்டளையை மனதில் கொண்டிருக்க வேண்டியது முக்கியமானதாகும். பொதுவான அரசியல் கோட்பாடுகள், நீண்டகால நட்புறவு மற்றும் பொதுவான கலாசாரம் அல்லது மதத்தின் விளைவாக எங்களுக்கு உதவுவதற்கு மேலதிகமாக அடியெடுத்து வைக்கும் என்று நம்புவதை விடவும் இலங்கை அதன் சொந்த நலன்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும்.

வெளிநாடுகள் எமக்கு தருவதற்கு முன்வருகின்ற ஒவ்வொரு உதவியையும் இலங்கையும் அதன் தலைவர்களும் குடிமக்களும் யதார்த்தபூர்வமான ஒரு முறையில் நோக்கவேண்டும். ஒவ்வொரு உதவியையும் அதன் தகுதியின் அடிப்படையிலேயே மதிப்பிட வேண்டும். வெளிநாடுகள் எமக்கு உதவுவதற்கு பெருந்தன்மையே உந்துதலாக இருப்பதாக நாம் நினைத்து விடக்கூடாது.

இலங்கை உறுதியான நாடாக வருவதற்கு வெளிநாடுகளின் ஒவ்வொரு உதவியையும் சொந்த நலன்களின் அடிப்படையில் தெளிவான சிந்தனை கொண்டு நோக்க வேண்டியது அவசியமாகும். மக்களின் நீண்டகால நல்வாழ்வுக்கு இசைவானதாக வெளிநாட்டு உதவிகளின் பயன்கள் அமைவதை உறுதிசெய்ய வேண்டும். உலகத்துடனான எமது நாட்டின் ஊடாட்டங்களை நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையும் ஆழமான ஆய்வும் வழிநடத்தவேண்டும். இதை கட்சி அரசியல் நலன்களினால் திசைதிருப்பப்படாமல் இருதரப்பு கருத்தொருமிப்பின் அடிப்படையில் செய்வதே சிறந்தது.

கட்சி அரசியலும் குறுகிய நோக்குடனான அரசியல் மற்றும் தனிப்பட்ட நலன்களே ஒரு சில விதிவிலக்குகள் தவிர எமது தோல்விகளுக்கு காரணமாக அமைந்தன என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

# தாக்குப்பிடிக்குமா...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கினால், ஹமாஸ் காசா பள்ளத்தாக்கை ஆட்சி செய்வதையோ அல்லது ஒரு படையாக அதை விட்டுச் செல்வதற்கோ இஸ்ரேல் விரும்பவில்லை.இது இஸ்ரேலுக்கு ஒரு திரிசங்கு நிலையைத் தோற்றுவிக்கிறது.

போரை முடிவுக்கு கொண்டுவந்து காசாவில் இருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேல் இணங்குமேயானால், காசாவில் ஹமாஸ் ஒரு தீவிரவாத கிளர்ச்சிப் படையாக தொடர்ந்தும் இருக்கும். இஸ்ரேல் காசாவில் தொடர்ந்து நிலைகொண்டிருக்குமானால், நிலைபேறான போர்நிறுத்த உடன்படிக்கை சாத்தியமில்லை. முழுமையான அழிப்புப் போரே தொடரும். (தி இந்து)

# ஒன்றிணைந்து...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்துகொள்வது அவசியம். மாறிவரும் அரசியல் சூழலில் நிரந்தர மான கட்சி விசுவாசம் என்பது மக்கள் மத்தியில் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, பாராளுமன்ற தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்த தமிழ் தேசிய கட்சிகளும் ஐக்கியமாகச் செயற்படுவதற்கான முயற்சிகளில் அக்கறை காட்டுகின்றன. இந்த முயற்சிகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே முன்னரங்கத்தில் நின்று முன்னெடுக்கிறார். அவர் முதலில் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கும்போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுயோசனைகளை தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த முயற்சிகளில் இறங்கியிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அத்துடன் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் சில தமிழ் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் சேர்ந்து அமைத்து செயலிழந்துபோன தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் நோக்குடனேயே அவர்களின் இந்த ஐக்கிய முயற்சிகள் அமைந்திருக்கின்றன.

சிறீதரன் இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைக்கின்ற போதிலும், இலங்கை தமிழரசு கட்சி உத்தியோகபூர்வமாக சம்பந்தப்படவில்லை. தமிழரசு கட்சியின் தலைவர்களில் சிறீதரன் கஜேந்திரகுமாருடன் இணைந்து செயற்படுவதில் அண்மைக்காலமாக ஆர்வம் காட்டி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவர் என்ற வகையில் சீறீதரன் தனியாக இந்த ஐக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதை தடுக்கும் நோக்குடன் கட்சியின் மத்திய செயற்குழு தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனைள் தொடர்பில் மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் நடத்தப்படக்கூடிய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு ஏழு பேரைக்கொண்ட குழுவை கடந்தவாரம் நியமித்தது. கஜேந்திர குமாருடனான பேச்சுவார்த்தைகளில் தமிழரசு கட்சி கலந்து கொள்ளுமா என்பது தெரியவில்லை. ஆனால் மத்திய செயற்குழுவின் தீர்மானம் சிறீதரன் பேச்சுவார்த்தைகளில் தனியாக பங்கேற்பதற்கு தடையாக இருக்கிறது. முன்னைய சில சந்தர்ப்பங்களில் கட்சியின் உத்தியோகபூர்வமான தீர்மானங்களுக்கு புறம்பாக செயற்பட்ட அவர் இது விடயத்திலும் அவ்வாறு செயற்படுவாரா என்பதும் தெரியவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் கட்சியின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என்பதே தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுவின் நிலைப்பாடாக இருக்கிறது. அதனால், தமிழ் மக்கள் பேரவையின் யோசனைகளின் அடிப்படையில் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு கஜேந்திரகுமார் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு தமிழரசு கட்சி ஒத்துழைக்கக்கூடிய சாத்தியம் குறித்து சந்தேகம் எழுகிறது.

மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட்டால் தமிழ் மக்கள் தங்களை முன்னரைப் போன்று அமோகமாக ஆதரிப்பார்கள் என்று தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் நினைக்கிறார்கள் போன்று தெரிகிறது.

ஆனால், உள்நாட்டுப் போருக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவாக நடைமுறைச் சாத்தியமான அரசியல் அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தவறியதன் காரணமாகவே வடக்கு தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள மறுப்பது துரதிர்ஷ்டவசமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதானி..

இந்திய விஜயத்தின் போது இது குறித்து ஆராயப்பட்டது.

ஜனாதிபதி, இலங்கை குறித்த கரிசனைகளை வெளியிட்டார். இதனால் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அதிகாரிகள் தயார் நிலையில் இருக்கின்றனர் என வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார். (அ)

## உண்ணாவிரத...

மாணவர்கள் அனைவரும் நேற்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கலைப்பீட முதலாம் ஆண்டு மாணவர்களின் பாடத்தெரிவுகள் மற்றும் மாணவர்கள் பழிவாங்கப்படுதல்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவை தனது கூடுதல் கவனத்தை வரும் காலத்தில் செலுத்தும் என்று உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்யும் போது பேரவை உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இனப்பிரச்னை...

புதிய அரசியலமைப்பினூடாவே கையாளப்படும் என்ற கருத்தை உத்தியோக பூர்வமாக பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்தவகையில் தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் மூன்று தமிழ் கட்சிகளுக்கும் வழங்கிய ஏகோபித்த ஆணையின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படை யில், இணைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய புதிய அரசியலமைப்புக்கான பொது யோசனை யொன்றை முன்வைப்பதற்கும், அர சாங்கம் உத்தேசித்துள்ள ஏக்கிராஜ்ய அர சியலமைப்பை தமிழ்த் தரப்பாக ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் நிராகரிப்பதற்குமான முயற்சியில் தங்களுடைய கட்சியின் ஒத்துழைப்பும் மிக அவசியமானதாகும்.

பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒரு தலைப்பட்சமாக தீர்மானங்களை நிறைவேற்றக் கூடியதான பலத்தில் அரசாங்கம் உள்ள நிலையில், அரசியல் தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் உள்ள தமிழ்க் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படவில்லையாயின், 19 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையுடன் தொடர்புடைய அறுதிப்பெரும்பான்மை நிலைப்பாட்டை தமிழ் மக்கள் சார்பாக வெளிப்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவோம்.

பாராளுமன்றில் 8 ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தலா ஒவ்வோர் ஆசனத்தைப் பெற்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திப்பதன் மூலம் தமிழர் தாயகத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மையான 10 ஆசனங்களை பாராளுமன்றில் உறுதிப்படுத்துவதற்குரிய ஒரு முயற்சியை மேற்கொள்கின்ற வகையிலேயே இந்த முயற்சி அமைந்துள்ளது.

இவற்றினடிப்படையில் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு. கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். குறித்த கலந்துரையாடலில் தங்கள் கட்சியும் கலந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். திட்டமிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் தொடர்பில் மாற்றங்கள் ஏதேனும் தேவைப்படின், மூன்று கட்சிகளுக்கும் பொருத்தமான வேறொரு திகதி மற்றும் நேரத்தினையும் கூட்டாக இணைந்து தீர்மானிக்க முடியும் என்பதையும் தங்களின் கவனத்துக்கு முன்வைக்கிறோம் - என்றுள்ளது. (அ)

## ஊழல்கள்...

கோப்புக்களில் நான்கு வழக்குகளுக்கு முழு ஆதாரங்களுடன் உடனடியாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

சட்டவிரோதமாக சொத்துக் குவிப்பு உள்ளிட்ட மோசடி மற்றும் ஊழல் தொடர்பான 4 கோப்புக்கள் வழக்கு விசாரணைக்காக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏனைய மூன்று வழக்குகள் தொடர்பிலும் மேலதிக சாட்சியங் களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விசாரணைகளை துரிதமாக முடிக்கு மாறு சட்டமா அதிபர் திணைக்களம் காவல்துறைக்கு பணிப்புரை விடுத் துள்ளது.

சட்டமா அதிபர் சட்டத்தரணி பரிந்த ரணசிங்க மற்றும் மேலதிக சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் அரச தலைவரின் சட்டத்தரணி ரொஹந்த அபேசூரிய தலைமையிலான சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்த தேவையான பணிகளை மேற்கொண்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மோசடியாளர்களை...

அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தையில் நிலவும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு உண்மையான காரணத்தை மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த அரசாங்கங்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை கொள்வனவு செய்வதற்கும், அரிசி உற்பத்திகளுக்கும் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை. அரிசி தட்டுப்பாடு ஏற்படும்போது அரிசி இறக்குமதி செய்து நெருக்கடிகளுக்கு தற்காலிக தீர்வு காண்பதையே பிரதான கொள்கையாகக் கொண்டிருந்தது.

2024 ஆம் ஆண்டு சிறு மற்றும் பெரும்போக விளைச்சலின்போது 5000 ஆயிரம் மெற்றிக் தொன் வரையிலான நெல் மாத்திரமே அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது. அரசாங்கத்தை பொறுப்பேற்கும்போது விவசாய அமைச்சிடம் போதுமான கையிருப்பு நெல் இருக்கவில்லை.

அரசுக்குச் சொந்தமான நெற் களஞ்சியசாலைகள் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் விவசாயிகளிடமிருந்து பெருந்தொகையான நெல் நேரடியாகக் கொள்வனவு செய்யப்படும்.

அரச நிதியை மோசடி செய்த ஊழல் வாதிகளைச் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமாயின் நிதி மோசடியாளர்கள் சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்த வேண்டும். எவரையும் பழிவாங்கவும், பாதுகாக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவுடன் அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டு அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளவே ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். சட்டம் அனைவரும் சமமானதாகச் செயற்படுத்தப்படும். குற்றமிழைத்திருந்தால் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு தேவையான வசதிகளை மாத்திரம் நீதி மற்றும் விசாரணைத் தரப்பினருக்கு வழங்குவோம் - என்றார். (அ)

# கொழும்புத் துறைமுகத்தில் பெரும் கொள்கலன் நெரிசல்

கொழும்பு, ஜன. 26

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் நெரிசல் தீர்க்கப்படும் என்று சுங்க அதிகாரிகள் கூறியபோதிலும், கொள்கலன்கள் இன்னும் துறைமுகத்தில் தேங்கி நிற்பதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுடன் ஒப்பிடும் போது துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார்.

குறித்த கொள்கலன்களை உடனடியாக விடுவிப்பதற்கு அதிகாரிகள் பணியில் இருப்பதை உறுதி செய்வதற்கு சரியான மேற்பார்வை இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

## கனடாவில்...

விரிவுரியாளருடன் ஸூம் தொழில் நுட்பமூடாக ஆராய்ச்சி குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தார். இதன் போது திடீரென மயங்கி கீழே விழுந்தார்.

இந்நிலையில் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தவேளை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணம் விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசனின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-05)

## ரணில்...

நிச்சயமற்ற நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

கூட்டணி அமைப்பது மிகவும் நல்ல விடயம் என்றாலும், இரு கட்சிகளும் அதில் உண்மையாக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனவா என்ற கேள்வி உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் ஆலோசகர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

மேலும், இந்த விடயத்தில் இரு கட்சிகளின் தலைவர்களிடமிருந்தும் கூட இன்னும் தெளிவான பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## யோஷித...

யோஷித ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கான போதுமான ஆதாரங் கள் இருப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்ததை அடுத்து இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, யோஷித தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி மேலும் நடவடிக்கை எடுப்பதற்காக இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட யோஷித விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை புதுக்கடை இலக்கம் 5 மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக யோஷித ராஜபக்ஷவை சந்தேகநபராகப் பெயரிடப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

தற்போது தொடரப்பட்டுள்ள இந்த காணி வழக்கின் பிரதான சந்தேகநபர், யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டெய்சி போரஸ்ட் என்ற பெண் ஆவார். (அ)

## விபத்தில்...

லொறியில், சாரதிக்கு அருகாமையில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைத் தூக்கம் காரணமாக மன்னாரில் லொறி மரத்துடன் மோதி விபத்து சம்பவித்தது. இதன்போது படுகாயமடைந்த குறித்த நபர் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ-05)

## பயங்கரவாத...

சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்தார்.

கொழும்பில் 'மக்கள் பேரவைக்கான இயக்கம்' ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சட்டத்தரணி நுவன் போபகே இது குறித்து கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக, மாற்று சட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனவும் பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் என்ற வார்த்தையைத் தொடர்ந்து பயன்படுத்தி, அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீதான ஒடுக்குமுறை செய்யும் வரலாற்றில், இவ்வாறான சட்டங்களை கொண்டுவருவது அந்த ஒடுக்குமுறையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் செயலாக இருக்கிறது.

மேலும், ஜனநாயகம் குறித்த தெளிவான நிலைப்பாட்டில் இல்லாது, பொருளாதாரம் தொடர்பாக கடந்த காலங்களில் அரசாங்கம் தெளிவான புரிந்துணர்வு இல்லாமையால் நாட்டு மக்கள் கடுமையான பிரச்னைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

ஜனாதிபதியின் இந்தியா மற்றும் சீனா விஜயத்தின்போது எட்டப்பட்டதாகக் கூறப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் அடிப்படையில், அந்த நாடுகளின் அதிகார நோக்கங்களுக்காக மக்களின் வளங்களை விற்கும் முறையும் அதே முறையில் செயல்படுத்தப்படுகிறது.

அதன்படி, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்றும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அரசாங்கம் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் விவரங்கள் பொதுமக்களுக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ முன்வைக்கப்படவில்லை என்பதுடன், மேலும் இந்த விடயத்தில் பொதுமக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கும் அரசாங்கம் பல்வேறு பிரசார திட்டங்களை மேற்கொண்டு வருகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# கொழும்பு - காங்கேசன் இடையே தினமும் இரவுநேர அஞ்சல் ரயில்!

## 31 ஆம் திகதி முதல் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜன 26

**ஜனவரி 31ஆம் திகதி முதல் கொழும்புக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் இரவு நேர அஞ்சல் ரயில் சேவையும் தின சரி சேவையில் சேர்க்கப்படும் என்று ரயில்வே பொது முகாமை யாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.**

சுற்றுலாத் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கும் நீண்ட தூர சேவைகளுக்காகவும் பல புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக மலையகப் மார்க்கம், ரயில் சுற்றுலாப் பயணிகளிடையே, பிரபலமாகவும், ஈர்ப்பு அதிகமாகவும் இருப்பதுடன் ரயில் சேவைக்கான அதிக கேள்வி இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

அதன்படி, பெப்ரவரி மாதம் முதல் எல்ல - ஒடிஸி - கெண்டி மற்றும் எல்ல ஒடிஸி - நானு ஓயா ஆகிய இரண்டு புதிய ரயில்கள் சேவைகளை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், எல்ல ஒடிஸி - கொழும்பு ரயில் சேவையில் மேலதிக பயணத்தை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எல்ல - ஒடிஸி - கெண்டி ரயில் சேவை, பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி முதல் ஒவ்வொரு வார இறுதியிலும் கண்டிக்கும் தெமோதரவுக்கும் இடையில் இயக்கப்படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

எல்ல ஒடிஸி - நானுஓயா ரயில் சேவை, பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் நானுஓயா மற்றும் பதுளைக்கு இடையில் இயக்கப்படவுள்ளது.

கொழும்புக்கும் பதுளைக்கும் இடையிலான எல்லா ஒடிஸி - கொழும்பு ரயில் சேவையில் மேலதிக ரயில் பயணத்தை பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் கொழும்பிலிருந்தும், பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பதுளையிலிருந்தும் புறப்படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## கிளிநொச்சியில் புதையல் தோண்ட முயற்சித்த 10 பேர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, ஜன. 26

கிளிநொச்சி திருநகர் பகுதியில், புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நேற்று காலை 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக பொலிஸாரின் உதவியுடன் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஸ்கானர், நீர் இறைக்கும் மோட்டர், மண்வெட்டி என்பன மீட்கப்பட்டன.

இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## பிரிட்டன் அமைச்சர் இலங்கை வருகிறார்



கொழும்பு, ஜன. 26

பிரித்தானியாவின் இந்து பசுபிக் வலயத்துக்கான அமைச்சர் கெத்தரின் வெஸ்ட் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

அவரது இந்த விஜயத்தின்போது, பொருளாதார வளர்ச்சி, ஊழல் எதிர்ப்பு, மனித உரிமைகள் மற்றும் தேசிய மறுசீரமைப்பு, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை ஆதரிக்கும் ஒரு புதிய ஏற்றுமதி திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் கவனம் செலுத்தப்படவுள் ளன.

அத்துடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் உயர் அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாட கேத்தரின் வெஸ்ட் திட்டமிட்டுள்ளதாக பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# வடக்கு ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆளுநரை சந்தித்து கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் வடக்கு மாகாண ஏற்றுமதியாளர் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண ஏற்றுமதியாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளமையை ஆளுநருக்கு தெரியப்படுத்தியதுடன் அதன் ஊடாக தம்மால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருக்கு விளக்கமளித்தனர்.

முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் அவற்றை விரைந்து தீர்ப்பதற்கான பொறிமுறை தொடர்பாகவும் இதன்போது ஆளுநருடன் கலந்துரையாடினர். (அ- 05)

## அரசின் இயலாமை வெளிப்படுகின்றது

### நளின் பண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 26

அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தாம் 24 மணிநேரமும் வேலை செய்வோம் எனவும் ஆட்சிக்கு வந்தவுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி மதுபான அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வோம் எனவும் கூறினர். ஆனால் அவற்றை இரத்து செய்ய முடியாது எனவும். அவை சட்டபூர்வமாகவே வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர். இதற்காகவா நாட்டு மக்கள் வாக்களித்தனர்.

அதேபோன்று மத்திய வங்கி கொள்கையில் ஈடுபட்டமையும் சட்டபூர்வமானது என கூறவும் எத்தனிப்பர். அந்த வகையில் எடுத்து நோக்கும்போது இந்த அரசாங்கத்துக்கு வெட்கம் உள்ளதா என வினவ விரும்புகின்றோம்.

கடந்த காலங்களில் திருடப்பட்ட அனைத்தும் சட்டபூர்வமானவை என்றும் இவர்கள் கூறுவார்கள். இதன் ஊடாக அரசாங்கத்தின் இயலாமையே வெளிப்படுகின்றது. அரிசித் தட்டுப்பாட்டையேனும் இந்த அரசாங்கத்தினால் நிவர்த்தி செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது.

ஜனாதிபதி அநுரா குமார நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்கிறார். அங்கு செல்லும் ஜனாதிபதி தேசிய மக்கள் சக்தியின் தலைவராகவே பேசுகின்றார். நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறன் இன்மையே வெளிப்படுகின்றது - என்றார். (அ)

# 17 சுயேச்சைக் குழுக்களை ஒன்றிணைத்து ஐக்கிய தமிழ் ஒன்றியம் அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்.தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட 17 சுயேச்சைக் குழுக்களை ஒன்றிணைத்து ஐக்கிய தமிழர் ஒன்றியம் நேற்று சனிக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அங்குராப்பண நிகழ்வு தொடர்பில் சுயேச்சை குழு 12 இன் முதன்மை வேட்பாளர் சிறீந்திரன் கருத்து தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியத் தலைமைகளின் அதிருப்தி நிலை காரணமாக தென்னிலங்கைக் கட்சிளுக்கு வாக்களிக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவானது.

இந்நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்படுவதற்காக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுக்களாக போட்டியிட்ட 17 சுயேச்சைக் குழுக்களின் முதன்மை வேட்பாளர் ஒன்றிணைந்து ஐக்கிய தமிழர் ஒன்றியமாக அங்குரார்ப்பணம் செய்து உள்ளோம்.

தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார இலக்குகளை முன்வைத்து எமது பயணம் முன்னோக்கிச் செல்லும் - என்றார். (அ-05)

# சுற்றுலா விடுதிகளில் இரவில் இசை நிகழ்வு நடத்த கட்டுப்பாடுகள் எதுவுமே கிடையாது!

கொழும்பு, ஜன. 26

சுற்றுலா விடுதிகளில் இரவில் இசை நிகழ்ச்சிகளை நடத்த அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளதாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது என்றும் அவ்வாறான கட்டுப்பாடுகள் எதனையும் அரசாங்கம் விடுவிக்கவில்லை என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

அரசாங்கம் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முற்படுகிறது. கடந்த 21 நாட்களில் 1.7 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். 40 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இந்த ஆண்டு நாட்டுக்கு அழைத்துவருவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், மாத்தறை பொல்ஹேன பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றை இரவு 10 மணிக்கு பொலிஸார் நிறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதியின் தீர்மானத்தின் பிரகாரம்தான் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அங்கிருந்த பெண் ஒருவர் கூறினார். இது அரசாங்கத்தின் தீர்மானம் இல்லை.

2005ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற தீர்பொன்று உள்ளது. 2010 ஆம் ஆண்டும் உயர்நீதிமன்றம் குறித்த தீர்ப்பு குறித்து விளக்கமளித்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் திங்கள், செய்வாய், புதன், வியாழக்கிழமைகளில் இரவு 10 மணிவரை விநோத நிகழ்வுகளை நடத்த முடியும். ஏனைய நாள்களில் 1.30 மணிவரையும் விநோத நிகழ்வுகளை நடத்த முடியும். அதன் பிரகாரம்தான் பொலிஸார் அதனை செய்துள்ளனர். மாறாக அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் இல்லை - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org